ஸ்ரீ

…பகோணத்தலத்தின் பெருமை.

மஹாமக மஹிமை.

694

கு…கோணம் நேடிவ்ஹைஸ்கூல்
…மைத் தமிழ்ப்பண்டிதர்
ஸ்ரீ …திவாசையங்காரால்
எழுதப்பட்டது.

…திவாசையங்காரால்
…சுரிக்கப்பட்டது
புக்ஸெ… … பப்ளிஷர், கும்பகோணம்.

…ம்.

…விலை அணா 8

OFFICE … 14 FEB 192… MADRA…

Q23:38.21193K
M21
171107

தேவாரம்

திருஞானசம்பந்தமூர்த்தி நாயனார்

அருளிச்செய்த

திருக்குடமூக்குப் பதிகம்.

திருச்சிற்றம்பலம்.

அரவிரி கோடனீட லணிகாவிரியாற் றயலே
மரவிரி போதுமௌவன் மணமல்லிகை கள்ளவிழும்
குரவிரி சோலைசூழ்ந்த குழகன் குடமூக்கிடமா
விரவிரி திங்கள்சூடி யிருந்தா னவனெம்மிறையே.

மயில் பெடைபுல்கியால மணன்மேன் மடவன்ன மல்கும், பயில் பெடைவண்டு பண்செய் பழங்காவிரிப் பைம்பொழில்வாய்க், குயில் பெடையோடு பாடலுடை யான் குடமூக்கிடமா. இயலொடு வானமேத்த விருந் தானவ னெம்மிறையே.

கழைவளர் கவ்வை முத்தங்கமழ் காவிரியாற்றயலே
தழைவளர் மாவினல்ல பலவின் கனிகடயங்கு
குழைவளர் சோலைசூழ்ந்த குழகன் குடமூக்கிடமா
இழைவளர் மங்கையோடுமிருந்தா னவனெம்மிறையே

மலைமலி மங்கைபாக மகிழ்ந்தானெழில் வைய முய்யச், சிலைமலி வெங்கணையாற் சிதைத்தான் புர மூன்றினையும், குலைமலி தண்பலவின் பழம்வீழ் குட மூக்கிடமா, இலைமலி சூலமேந்தி யிருந்தானவ னெம் மிறையே.

நெடுமுடி பத்துடைய நிகழ்வாளரக்கன் னுடலைப்
படுமிடர் கண்டயரப் பருமால் வரைக்கீ ழடர்த்தான்
கொடுமட றங்குதெங்கு பழம்வீழ் குடமூக்கிடமா
இடமண லெக்கர்சூழ விருந்தானெவ னெம்மிறையே.

வெண்கொடி மாடமோங்கு விறல்வெங்குரு நன்னகரான், நண்பொடு நின்றசீரான் றமிழ்ஞான சம்பந்தனல்ல, தண்குட மூக்கமர்ந்தா னடிசேர் தமிழ்பத்தும் வல்லார், விண்புடை மேலுலகம் வியப்பெய்துவர் வீடெளிதே.

திருநாவுக்கரசு நாயனார்

அருளிச்செய்த

திருக்குடமூக்குத் திருக்குறுந்தொகை

திருச்சிற்றம்பலம்.

பூத்தாடிக் கழியா தேநீர் பூமியீர்
தீத்தாடி திறஞ் சிந்தையுள் வைம்மினோ
வேர்த்தாடுங் காளிதன் விசை தீர்கென்று
கூத்தாடி யுறையுங் குடமூக்கிலே.
நங்கையாளு மையாளுறை நாதனார்
அங்கையாளொ டறுபதந் தாழ்சடைக்
கங்கையா ளவள் கன்னி யெனப்படும்
கொங்கையா ளுறையுங் குடமூக்கிலே.

ஓதாநாவன் றிறத்தை யுரைத்திரேல்
ஏதானு மினிதாகு மியமுனைச்
சேதா வேறுடையான மர்ந்தவிடங்
கோதாவிரி யுறையுங் குடமூக்கிலே.
காமியஞ்செய்து காலங் கழியாதே
ஓமியஞ் செய்தங்குள் ளத்துணர்மினோ
சாமியோடு சரச்சுவதியவள்
கோமியு முறையுங் குடமூக்கிலே.

குடந்தைக்கீழ்
கோட்டத் திருத்தாண்டகம்.
திருச்சிற்றம்பலம்.

சொன்மலிந்த மறைநான்கா றங்கமாகிச்
சொற்பொருளுங் கடந்தசுடர்ச் சோதிபோலும்
கன்மலிந்த கயிலைமலை வாணர்போலும்
கடனஞ்ச முண்டிருண்ட கண்டர்போலும்
மன்மலிந்த மணிவரைத் திண்டோளர்போலும்
மலையரையன் மடப்பாவை மணாளர்போலும்
கொன்மலிந்த மூவிலைபோற் குழகர்போலும்
குடந்தைக் கீழ்க்கோட்டத் தெங்கூத்தனாரே.

நீறலைத்த திருவுருவு நெற்றிக்கண்ணு
நிலாவலைத்த பாம்பினொடு நிறைநீர்க் கங்கை
ஆறலைத்த சடைமுடியு மம்பொற்றாளும்
அடியவர்க்குக் காட்டியருள் புரிவார்போலும்
எறலைத்த நிமிர்கொடியொன் றுடையார்போலும்
எழுலகுந் தொழுகழ லெம்மீசர் போலும
கூறலைத்த மலைமடந்தை கொழுநர் போலும்
குடந்தைக் கீழ்க்கோட்டத் தெங்கூத்தனாரே.

முடிகொண்ட வளர்மதியு மூன்றாய்த் தோன்றும்
முளைஞாயி றன்னமலர்க்கண் கண்மூன்றும்
அடிகொண்ட சிலம்பொலியு மருளார்சோதி
யணிமுறுவற் செவ்வாயு மழகாய்த்தோன்றத்
துடிகொண்ட விடைமடவாள் பாகங்கொண்டு
சுடர்ச்சோதிக்கடற்செம்பொன் மலைபோலிந்நாள்
குடிகொண்டென் மனத்தகத்தே புகுந்தார்போலும்
குடந்தைக் கீழ்த்கோட்டத்தெங் கூத்தனாரே.

எவியிடர்க் கடலிடைப் பட்டிளைக்கின்றேனை
இப்பிறவி யறுத்தேற வாங்கியாங்கே
கூவியம ருலகனைத்து முருவிப்போகக்
குறியிலறு குணத்தாண்டு கொண்டார்போலும்

தாவிமுதற் சாவிரிநல் யமுனைகங்கை
சரசுவதி பொற்றாமரை புட்கரணி தெண்ணீர்க்
கோவியொடு குமரிவரு தீர்த்தஞ் சூழ்ந்த
குடந்தைக்கீழ்க் கோட்டத்தெங் குமரனாரே.

திருஞானசம்பந்தமூர்த்தி நாயனார்

அருளிச்செய்த

திருக்குடந்தைக் காரோணப்பதிகம்.

திருச்சிற்றம்பலம்

வாரார் கொங்கை மாதோர்பாக மாகவார்சடை
நீரார் கங்கை திங்கள்சூடி நெற்றியொற்றைக்கண்
கூரார் மழுவொன் றேந்தியந்தண் குழகன்குடமூக்கில்
காரார்கண்டத் தெண்டோளெந்தைகாரோணத்தாரே.
முடியார் மன்னர் மடமான்விழியார் மூவுலகுமேத்தும்
படியார் பவளவாயார் பலரும் பரவிப்பணிந்தேத்தக்
கொடியார்விடையார் மாடவீதிக்குடந்தைக்குழகாரும்
கடியார் சோலைக்கலவமயிலார் காரோணத்தாரே.

பூவார் பொய்கை யலர்தா மரைசெங்கழுநீர் புறவெல்லாம், தேவார் சிந்தை யந்தணாளர் சீராலடி போற்றக், கூவார் குயில்களாலு மயில்களின் சொற்கிளிப்பிள்ளை, காவார் பொழில் சூழ்ந்தழகார் குடந்தைக் காரோணத்தாரே.

கருவார் பொழில்சூழ்ந் தழகார் செல்வக் காரோணத்தாரைத்; திருவார் செல்வமல்கு செண்பைத் திகழுஞ் சம்பந்தன், உருவார் செஞ்சொன் மாலையி வைத்துரைப்பா ருலகத்துக், கருவா ரிடும்பைப்பிறப் பதறுத்துக் கவலைகழிவாரே.

திருக்குடமூக்கு—கும்பேசுவரர் ஆலயம்.
திருக்குடந்தைக் கீழ்க்கோட்டம்—நாகேசுவரர்ஆலயம்
திருக்குடந்தைக்காரோணம்—விசுவநாதராலயம்.

OFFICE OF ... REGISTRAR OF BOOKS
14 FEB 1921
MADRAS.

கும்பகோணத் தலத்தின் பெருமை.

முதலாவது—சிவாலயங்கள்.

ஸ்ரீ ஆதிகும்பேசர்.

அரவிரி கோடனீட லணிகாவிரியாற்றயலே
மரவிரி போதுமௌவன் மணமல்லிகை கள்ளவிழும்
குரவிரி சோலைசூழ்ந்த குழகன் குடமூக்கிடமா
இரவிரி திங்கள்சூடி யிருந்தானவ னெம்மிறையே.

அமுதகும்ப வரலாறு.

(கும்பகோணம் என்னும் பெயர்க்காரணமும், ஸ்ரீ கும்பேசுவரர் பெயர்க்காரணமும்:—)

கும்பகோணம் அல்லது திருக்குடந்தை யென்னும் பெயர்வாய்ந்த தலத்தின் மஹிமை அளவிறந்தனவாம். சைவத்தலங்களும், வைஷ்ணவத் திருப்பதிகளும் மிகுதியாக நிறைந்து, காவிரிநதி பாய்தலால் வளம்மிகுந்த சோழ நாட்டில் கும்பகோணம் மிகச்சிறந்த தலமாம். அதற்கு அப்பெயர் வந்த வரலாற்றையும், இன்னும் அத்தலத்தின் பெருமையையும், மஹாமகம் என்னும் திருவிழாவின் சிறப்பை

யும், அப்பெயர்கொண்ட தீர்த்தத்தின் மஹிமையையும் இங்கே கூறுவாம். முற்காலத்தில் பிரமதேவன் திருமாலின் உந்திக்கமலத்தில் தோன்றி இவ்வுலகினைச் சிருஷ்டித்துக்கொண்டிருந்தார். அவர் அங்ஙனம் செய்துகொண்டு வருகையில், தினகற்பம் வந்துவிடுமே; அதனால் இவ்வுலகமும் அவற்றிலுள்ள எல்லாப் பொருள்களும் அழிந்துவிடுமே; அதற்கு யாது செய்யலாம் என்று கருதிக் கைலாசமலையையடைந்து பரமசிவனை வணங்கித் துதித்தார். அப்பெருமான் பிரமதேவரைப்பார்த்து, நீர் யாதுகருதி நம்மைத் துதிக்கின்றீர் என்று வினவப் பிரமதேவர், சுவாமி அடியேன் தேவரீருடைய அருளினால் சிருஷ்டி பீஜத்தைப் பெற்று இவ்வுலகையும் மற்றுமெல்லாவற்றையும் சிருஷ்டித்தேன். இப்பொழுது தினகற்பம் வரப்போகின்றதே அக்கற்பத்தில் எல்லாச் சமுத்திரங்களும் ஒன்றுதிரண்டு சிருஷ்டிபீஜத்தையும் மற்றெல்லாவற்றையும் அழித்துவிடுமே. அக்கற்பம் நீங்கியபிறகு, நான் எதை வைத்துக்கொண்டு மறுபடியும் இவ்வுலகையும் உயிரையும் சிருஷ்டிப்பேன் என்னும் கவலையே எனக்கு மிகுந்துள்ளது. அதனை உமதருளால் போக்கிக்கொள்ளவே வந்தேன். நீர் எனக்கு அருள்புரியவேண்டும் என்று வேண்டி நின்றார்.

அப்பொழுது பரமசிவன், "பிரமதேவரே! நீர் அதன்பொருட்டு அஞ்சவேண்டாம். நீரையும் அமுதத்தையும் கலந்து மண்பிசைந்து ஒரு குடமாகச்செய்து, அதனுள் அமுதத்தை நிரப்பிச் சிருஷ்டிபீஜத்தையும் வைத்து, அக்குடத்தின் மேலே நாற்பக்கத்திலும் வேதம், வேதாங்கம், இதிஹாசம், புராணம் முதலியவற்றையும்சேர்த்து அக்குடத்தின்வாயில் தேங்காயும் மாவிலையும் வைத்து, மேலே பூணூல் அணிந்து, தர்ப்பத்தினால் செய்த கூர்ச்சத்தையும்சேர்த்து வில்வதளத்தை மேலே வைத்து, மந்திராக்ஷதையையும் மஞ்சளையும் அப்பி, நீர் வாசஞ்செய்து கொண்டிருக்கும் மஹாமேருமலையில் ஓரிடத்தில் ஒருறியில் அக்குடத்தை வைத்துவிட்டுக் கவலையின்றி உமது தொழிலைச் செய்துகொண்டிருக்க. அப்பொழுது பிரளயம்வரும். அப்பிரளய நீரில், அமுதகடம் மிதந்து கொண்டே தன் போக்கின்படியே தென்திசை நோக்கிச் செல்லும். அங்ஙனம் செல்லும் குடம் அத்திசையிலுள்ள கிழக்குச் சமுத்திரத்திற்கு மேற்குப்பக்கமாகச் செல்ல, அங்கே ஒரு தலத்தில் அக்குடத்திலுள்ள மாவிலை, தருப்பம் முதலியன கீழே விழுந்துவிடும் அதனை எனதருள்பெற்ற ஏழு கன்னியர் நீரு

ருவமாக இருந்து காத்துக்கொண்டிருப்பார்கள். அங்கே நாம் இலிங்கவடிவமாக இருப்போம்.

பின்னர் அக்குடம் அத்தலத்தின் வாயு மூலையில் ஒரு கூப்பிடுதூரம் சென்றவுடன், கீழே தங்கிவிடும். அப்பொழுது நாம் ஒரு வேடனாகி, அம்பினால் அக்குடத்தைச் சேதித்து சிருஷ்டிபீஜத்தை அங்கே ஸ்தாபித்துப் பூஜையும் புரிவோம். அக்குடத்தை அம்பினால் சேதித்தவுடன், அதிலுள்ள அமுதமானது ஐந்து கூப்பிடுதூரமுள்ள பூமியை நனைக்கும். அவ்விடமெல்லாம் மிக்க தூய்மை வாய்ந்ததாம். அந்தக் கும்பத்தைத் தாபித்து நாம் பூஜித்த இடத்திற்குக் கீழ்பக்கத்தில் ஒரு தீர்த்தத்தையும் உண்டாக்குவோம். அந்த ஊரி முதலியன வெல்லாம் சிவலிங்கமாகும். அங்கே நம்மைக் கும்பலிங்கத்தில் யார் யார் பூஜிக்கின்றார்களோ அவரவர்கள் கருதியவற்றையெல்லாம் தந்தருளுவோம். நீரும் அங்கேவந்து நம்மை பூஜித்துத் துதித்துக் கருதியவற்றைப் பெறுவீராக' என்று கூறியருளினர். பிறகு பிரமதேவன் அவர்கூறியவண்ணமே ஆக்கித் தம் தொழிலைக் கவலையின்றி செய்துகொண்டிருந்தார்.

அப்பொழுது கருதியபடியேபிரளயம்வந்தது
எல்லாக் கடல்களும் ஒன்றுசேர்ந்து வந்தன.
மேருமலை முதற்கொண்டு எல்லாப் பொருள்
களும் அக்கடல் வெள்ளத்தில் மூழ்கிவிட்டன
எங்கே பார்த்தாலும் ஒரே வெள்ளமாக இருந்
தது. அப்பொழுது மஹாமேரு மலையிலுள்ள
அமுதகுடம் வெள்ளத்தில் மிதந்தது. தென்
திசைசெய்த தவப்பயனால் அத்திசையை நோ
க்கி மெல்லப் படர்ந்தது. அங்ஙனம் சென்ற
குடத்திலுள்ள மாவிலை, தருப்பம் முதலியன
கீழைச் சமுத்திரத்திற்கு மேற்றிசையில் ஐந்து
யோஜனை தூரத்தில் விழுந்துவிட்டன. அங்கே
தருப்பம் ஒரு லிங்கமாக ஆயிற்று. கீழேவிழு
ந்த மாவிலை வன்னிமரமாகி அதனை நிழல்செய்
து கொண்டிருந்தது. அப்பொழுது சப்த
கன்னியர்கள் நீருருவமாகி அவ்விலிங்கத்தை
வளைந்து காத்திருந்தனர். அங்ஙனம் தருப்
பை, மாவிலை விழுந்த இடத்திற்கு வடமேலாக
ஒரு கூப்பிடுதூரத்திற் கப்பால், வெள்ளம் வற்
றிப்போக, ஓரிடத்தில் அமுதகுடம் கீழே தங்
கிற்று. பிரமதேவரும் காந்தம் வலியும் இரும்
பே போல் குடத்தைத் தொடர்ந்து; அது தங்
கிய இடத்து வந்துநின்று ஆனந்தக் கூத்தாடி
னார். க்ஷேத்திரபீஜ கும்பமென்று பெயர்

பெற்ற அந்த அமுதகுடத்தைத் திருக்கைலாயத்தமர்ந்த சிவபிரான் காணவேண்டும் என்று கருதி, வேடரூபங்கொண்டு தம்முடைய கணங்களையும் வேடர்களாக வருமாறுகூறி, அம்பிகையை நோக்கி, நாம் ஒரு முக்கியமான காரியத்தின்பொருட்டு இதோ வெளியில் போய் விட்டுவருகிறோம் என்று கூறிவிட்டு, ஸ்ரீ கைலாசமலையினின்றும் இறங்கித் தென்திசை நோக்கிப் புறப்பட்டார். அவர் திருஇடைமருதூரையடைந்து, அமுதகுடம் அவ்விடத்திற்கு மேற்றிசையில் தங்கியிருப்பதுணர்ந்து, நாம் அக்குடத்தைச் சிதைத்து, அமுதத்தை யெங்கும் வழியும்படி செய்வோம் என்று கூறினார். அதனையுணர்ந்த ஹரிஹர குமரனாகிய ஐயனார், அதுவே தக்கது; அவ்விதமே செய்து நீர் உலகை வாழ்விக்கவேண்டும் என்று கூறித்துதித்து ஓரம்பினை யெடுத்து அவர்கையில் கொடுத்தார். பரமசிவன் அக்கணை அக்கும்பத்தைச் சிதைக்காது என்றுகூறி, தம்முடைய கணையொன்றெடுத்து வில்லில் வைத்துத் தொடுத்துக் கும்பத்தைக் குறித்து எய்தார். அது கும்பத்தைச் சிதைத்ததையறிந்து சாத்தன் மிக்க வியப்படைந்தான். அவர் நின்று பாணம் எய்தவிடம் பாணபுரி என்று வழங்கு

ந்தாயிற்று. அங்கேயுள்ள சாத்தாவுக்கு ஏக பாணசாத்தா என்னும் நாமமும் எய்துவதாயிற்று.

பரமசிவன் விட்ட பாணம் அமுதகுடத்தின் வாயைச்சிதைத்து, அதனை அக்குடமிருந்த இடத்திற்குத் தென்கிழக்குமூலையில் கொண்டுபோய்ப் போட்டது அதுசேர்ந்த இடத்தில் ஒரு இலிங்கம் தோன்றிற்று. குடத்தின் வாய் இருக்குமிடமாதலின், அத்தலத்தினைக் குடவாயில் [குடவாசல்] என்று அழைப்பார்கள். அங்கேயுள்ள ஈசுவரனுக்குக் கோணேசர் என்று பெயர். குடத்தின் வாய் சிதைந்தவுடன் உள்ளேயிருந்த அமுதம் வெளிப்பட்டு ஐந்து கூப்பிடுதூரம் பரவிற்று. அப்பொழுது அதனையெய்த வேடனாகிய பரமசிவன் அக்குடமிருக்குமிட மடைந்து, குடத்தினின்றும் வழியும் அமுதம் அவ்விடத்துக்கு நேர்கிழக்கிலும் தென்கிழக்கிலும் ஓர் வாவியாகத் தேங்கவேண்டும் என்று கருதினர். அது அவ்விதமே தேங்கி இரண்டு வாவிகளாக ஆயிற்று. அதில் மூழ்கி நீராடுபவர்கள் தங்களுடைய தீவினையைப்போக்கி நினைந்தவற்றை யடைவர் என்றும் வரங்கொடுத்தார்.

பிறகு அவர், அக்கும்பத்திலிருந்து சிதைந்தவற்றை ஒன்றாகப் பிடித்து இலிங்கமாயமைத்து, அவ்விலிங்கத்தைப் பூஜைசெய்து தமது வேடரூபத்தை விடுத்து அவ்விலிங்கத்தில் மறைந்தருளி அங்கே தன்னை வழிபடுமவர்க்கு வேண்டுவனவெல்லாம் அளித்தருள்புரிவாராயினர். கும்பத்தின் கோணத்திலிருந்து அமுதம் பரவிய ஐந்து கூப்பிடுதூரமும் கும்பகோண மென்று பெயர் பெற்று விளங்குகிறது. அதில் எழுந்தருளிக் கோயில்கொண்டிருக்கும் ஈசுவரன் அமுதகும்பத்தில் எழுந்தருளியிருப்பதால், அமுதகும்பேசுவரர் என்றும், ஆதிகும்பேசுவரர் என்றும் வழங்கும் நாமமுள்ளவராயினர்

ஸ்ரீ மங்களாம்பிகை வரலாறு.

பிறகு, கைலாசத்தில் பார்வதி தேவியானவள் தம் நாயகர் வேடரூபத்துடன் போனவர் இன்னும் வரவில்லையேயென்று கருதிக்கொண்டிருக்கும்பொழுது, பிரமதேவர் முனிவர் முதலியவர்கள் கைலாயம்சென்று தேவியாரை அடிதொழுது பரமசிவன் வேட்டுவனாகச் சென்று, கும்பகோணத்தில் அமுதகடத்தில் கலந்திருப்பதைக் கூறினார்கள்.

அதனைக்கேட்ட தேவியார் தாமும் அவ்விடம்சென்று, அமுதலிங்கேசரைத் தரிசிக்க வேண்டுமென்று கருதித் தமது தோழியர்கள் சூழ்ந்துவரக் கும்பகோணத்தை நோக்கிப் புறப்பட்டு, ஐந்து கூப்பிடுதூர எல்லையளவின தான அத்தலத்தை யடைந்து, அமுதம்பெருகிய இரு வாவிகளிலும் குடைந்து நீராடி, அமுத குடத்தில் அமர்ந்துள்ள தேவனாகிய சிவலிங்கப் பெருமானைக்கண்டு வணங்கித் துதித்து நின்றனர். அவள் வந்திருப்பதையறிந்த ஆதிகும்பேசர், நமது தேவியே, நீ எப்பொழுது வந்தாய் என்று வினவத் தேவியார் அடியேன் இப்பொழுதுதான் வந்தேன் என்று விடைபகர்ந்தார். அதனைக்கேட்ட கும்பலிங்கர் நீ வந்தது நல்லதாயிற்று. நீயும் இங்கே நமக்கு இடப்பக்கத்தில் அமர்ந்து, யாவர்க்கும் வரங்கொடுத்துக் கொண்டிருப்பாய் என்று அவர் பணித்தருளினர். அவ்வண்ணமே அத்தேவியார் ஈசுவரனுக்கு வடபுறத்தில் மங்கள பீடமாகிய மந்திரபீடத்தில் எழுந்தருளியிருந்து, தம்மை வழிபடுகின்ற அடியவர்களுக்கு பல மங்களங்களும் தருவாள் ஆகையினாலே அவள் மங்களநாயகி என்று பெயர் பெறுவாளாயினர்.

பிரமதேவர் திருவிழாச்செய்தது.

பிறகு பிரமதேவர், அமுதம் பரவிய ஐந்து கூப்பிடுதூர எல்லையையும் ஒரு நகரமாகச் செய்யவேண்டும் என்று நினைத்துத் தேவர்களோடும் ஆராய்ந்து, தேவசிற்பியான விசுவகர்மனை வரவழைத்து, நீ இங்கே ஒரு நகரம் காண்பாய்; ஆதிகும்பேசுவரருக்கும் மங்களநாயகிக்கும் கோயில்கள் சமைப்பாய் என்று பணித்தருளினர். அவர் பணித்தவண்ணமே விசுவகர்மன், ஆதிகும்பேசுவரருக்கும் மங்களநாயகிக்கும் ஆகமங்களில்கூறிய வண்ணமே கோயில்களிபற்றி, அந்தணர்வீதி, க்ஷத்திரியர் தெரு வைசியர் தங்குமிடம், சூத்திரர் தெரு முதலிய பலவற்றையும் வகுத்துக் கோட்டை, மதில் அகழ் முதலியவற்றையும் செய்து பிரமதேவரை வணங்கி நின்றன்.

அப்பொழுது பிரமதேவர் சிவபூஜைபுரியும் ஆதி சைவர்களையழைத்து, மந்திரவிதிப்படி ஆதிகும்பேசுவரருக்கும் மங்களநாயகிக்கும் கும்பாபிஷேகம் செய்வித்தார்.

பிறகு அப்பிரமதேவர், அமுதகும்பேசுவரருக்கும, மங்களநாயகிக்கும் திருவிழாச் செய்யக்கருதி: அதற்குக் கும்பமாசமாகிய மாசி

மாதமே தக்கது என்று எண்ணி, அம்மாதத்தில் பூர்வபக்ஷத்தில் அசுவினி நக்ஷத்திரங்கூடிய சுபதினத்தில் அனுக்ஞைபெற்றுக் கொடியேற்றிப் பத்துநாளும் காலை மாலைகளில் வாஹனங்களில் சுவாமிக்கும், அம்மனுக்கும் அலங்காரங்கள் செய்து வீதியில் புறப்பாடுசெய்து விழாக் கொண்டாடினர்.

பிறகு, பத்தாவது நாள் ரதாரோஹணம் கண்டருளி மக நட்சத்திரத்தில் கோயிலுக்குத் தென்கீழ்த் திக்கிலுள்ள அமுதம்தங்கிய வாவியில் மகமும் பூரணையுங்கூடிய நன்னாளில் சிம்ம ராசியில் தேவகுருவாகிய வியாழன் வருங்காலத்தில் திருவிழாமுடிவில், சுவாமிக்கும் மங்களநாயகிக்கும் அவபிருத ஸ்நானம் செய்வித்தருளினர்.

பின்னர், அப்பிரமதேவர் ஆதிகும்பேசுவரரையும் மங்களநாயகியையும்,

"மீதலமுடியா வெளியெலாமுருவா விளங்குமுச்சுடர்களுங் கண்ணாப், பூதல மடியாத் திசையெலாம் புயமாப் பகர்தரு சொல்லெலா மறையாப், பூதலமரையாநெடுவெளி யுயிர்ப்பாப் பொருந்தியபிறவுமற்றவையாக்,காதலங்கருணை கதித்த கும்பேசக் கடவுளையென்று நான்மறவேன்."

"மறைச்சிலம் படியுந் தரக்கதளுடுத் தூ வரியரவசைத்திடு மரையும், நறைத்தடங் கடுக்கை மார்புமாமேரு நண்ணியவரிசிலைத்தோளும், முறைத்தவண் கருணைமுகமுமா மறைமுற் றுரைத்தசெவ்வாயுமெக் கரிசும், குறைத்தவர் வளமைகுலாங் குடமூக்குங் கொண்டவன் றிருவடிபோற்றி" என்று துதித்து நின்றார்.

அப்பொழுது ஆதிகும்பேசர் அவரைநோக்கிப் பிரமதேவரே, நீர் செய்த திருவிழாவிற்கும் துதிக்கும் நாம் மிகமகிழ்ந்தோம் நீர் வேண்டிய வரங்களை எம்மிடத்தில் பெற்றுக் கொள்க என்றருளினார். அப்பொழுது பிரமதேவர், ஈசுவரனுடைய கருணைத்திறத்தை வியந்து சுவாமி, தேவரீரை ஒருமுறை தரிசனம் செய்பவர்களும் அவர் கருதியவற்றை யெல்லாம் அடையவேண்டும். கும்பமாசத்தில் பூரணையும் மகா நட்சத்திரமும் கூடிய சுபதினத்தில் உம்மைத் தரிசனம் செய்பவர்கள் பிரமஹத்தி முதலிய பாதகங்களைச் செய்தவரேனும் அவர்கள் அவற்றினின்றும் விடுபடவேண்டும். மிக்க வறியவர்களாயிருந்தாலும், மகோத்ஸவத்தைக் காண்பார்களாயின் அவர்கள் குபேரனும் மதிக்கத்தக்க செல்வமுள்ளவர்களாக வாழவேண்டும். இந்த மகத்தினத்தில் தென்கீழ்த்

திசையிலுள்ள இவ்வமுத வாவியில் எல்லாத் தீர்த்தங்களும் வரவேண்டும். வெகு தூரத்தி லிருந்துகொண்டு இங்கே வரமுடியாதவர்கள் இங்கே வரவேண்டுமென்று நினைப்பார்களா யின் அவரவர்கள் கருதும்பேறெல்லாம் பெறல் வேண்டும். பன்னிரண்டு வருடத்துக் கொரு முறை சிங்கராசியில் வியாழன் வருங்காலத்தில் நான் தேவர்களோடும் வந்து உம்மைப் பூஜித் துத் திருவிழாக்கொண்டாடும்வண்ணம் அருள் புரியவேண்டும். வருடந்தோறும், மாதந்தோ றும் நமக்குத் திருவிழா எடுப்போர் தாம் கரு தியவற்றைப் பெற்று இன்பமுற்று வாழவேண் டும். அன்றியும், கல்வியற்றோர் கல்வியையும், மகவற்றோர் மகவையும், பொருளற்றோர் பொரு ளையும், இன்னும் யார் யார் எதை யெதை வேண்டுவரோ அவரவர் அதையதை உம்மைக் கருதுவதாலும், வாழ்த்துவதாலும், காண்ப தாலும் பெறவேண்டுமாறு அருள்புரியவேண் டும் என்று வேண்டிக் கொண்டார். ஈசுவரர் அங்ஙனமே யாகுக என்றருள்புரிந்து மறைந் தருளினர்.

ஸ்ரீ விசுவநாதர் வரலாறு.

முன்னொருகாலத்தில் கங்கை, யமுனை, சர சுவதி, நருமதை, கோதாவரி, காவேரி, பயோ

ஷ்ணி, சரயு, கன்யாகுமரி என்று பெயர்பெற்ற நதிகளின் உருவமான கன்னியர் ஒன்பதின் மரும் ஒன்றுசேர்ந்து, "நம்மிடத்தில் நீராடி உலகத்திலுள்ளவர்கள் தங்களுடைய பாவங் களைக் கழுவிச்செல்கின்றார்கள். அவ்வண்ணம் அவர்கள் கழுவிச்சென்ற பாபம் நம்மிடத்தில் மிகுதிபாகி, நம்மால் தாங்கமுடியாததாக இரு க்கின்றது இதிலிருந்து நாம் தப்புதற்கு ஒரு வழிதேடவேண்டும். அதற்குக் கைலாசநாத னே நமக்கு வழி கூறுவதற்குரியார். நாம் அவ ரிடம் போய் நமது குறையைத்தீர்த்துக்கொள் வோம்" என்றுகருதி அவர்களனைவரும் ஒன்று கூடிக் கைலாயமலையை யடைந்து பரமசிவனை வணங்கித் துதித்தார்கள்.

அவர், அவர்கள் புகழ்ந்ததைக் கேட்டுக் கன்னியர்களே! நீங்கள் எதற்காக நம்மைத் துதிக்கின்றீர்கள். உங்களுக்கு என்ன குறை நேர்ந்தது என்று வினவினர். அதற்கு அக் கன்னியர்கள சுவாமி, அடியோங்களிடத்தில் உலகத்திலுள்ளவர்கள தங்களுடைய பாவங் களைத் தொலைத்துச் செல்கின்றார்கள் நாங்கள் அப்பாவத்தைப் பொறுக்கமுடியாமல் அதனால் வருத்தமுறுகின்றோம். அதிலிருந்து எங்களை தப்புவிக்கவேண்டும் என்று பிரார்த்தித்தனர்.

அப்பொழுது பரமசிவன், அவர்களை நோக்கிக் கன்னியர்களே, நீங்கள் அதன்பொருட்டுக் கவலைப்படவேண்டாம். இங்கிருந்து தென்திசையில் கும்பகோணம் என்று ஒரு தலமிருக்கின்றது அத்தலத்தின், தென்கீழ்த்திசையில், ஒரு தீர்த்தமிருக்கின்றது. அத்தீர்த்தத்தில் தேவகுருவாகிய வியாழபகவான் சிங்கராசியையடையும் காலத்தில் மாசிமாதம் பூரணையும் மக நட்சத்திரமும் கூடிய நாளில், நீங்கள் சென்று மூழ்குவீராகில், உங்கள் பாவமெல்லாம் உம்மைவிட்டு நீங்கும். அத்தலம் இக்கலையிலும் தூய்மையுள்ளதாகும். நாம் அந்தலத்திலும் அத்தீர்த்தத்திலும் மிகுந்தபிரியம் வைத்திருக்கின்றோம். நாம்உங்களுக்குக்கூறிய தினம் பன்னிரண்டு வருடத்துக்கோர்முறை வரும். அதுவும் இப்பொழுது சமீபத்தில வருகிறது. நீஙகள் அங்கே இப்பொழுதே செல்லுங்கள் என்றருளினார்.

அப்பொழுது அக்கன்னியர்கள் அவரடிகளில் வீழ்ந்து வணங்கி, கருணாமூர்த்தியே! தேவரீர் திருவாய்மலர்ந்தருளிய தலம் எவ்விடத்துள்ளது என்று நாங்கள் அறியோமே; அதற்கு யாதுசெய்வோம் என்று விண்ணப்பித்துக் கொண்டனர். அதனைக்கேட்ட பரமசிவன்,

கன்னியர்களே! நீங்கள் காசி க்ஷேத்திரத்தைத்
அடைந்திருங்கள். நாம் விசுவநாதர் என்னும்
பெயருடன் உங்களை அத்தலத்திற்கு அழைத்
துச் செல்கின்றோம் என்று அருள்செய்தார்.
கன்னியர்களும் அவர்கூறியவண்ணம் காசியை
யடைந்து விசுவநாதருடைய வரவினை எதிர்
நோக்கிக்கொண்டிருந்தனர்.

பின்னர் பரமசிவன் அவர்கட்கு அருளிய
வண்ணமே காசிமாநகரம் சென்று, அவர்களுக்
குக் காட்சியளித்து அவர்களால் வணங்கப்
பெற்று, தேவர்களும், நவகன்னியர்களும், பூத
கணங்களும் தம்மைப் பின்றொடர்ந்துவரக்
கும்பகோணத் தலத்தினையடைந்தார். அங்கே
அவர் கன்னியர்களை நோக்கிக் கன்னியர்களே!
அமுதகும்பத்தில் பொருந்தி நாம் விளங்கிக்
கொண்டிருக்கும் தலம் இது. இவ்விலிங்கம்
தான் அமுதகும்பேசுவரர் என்னும் நாமத்
துடன் விளங்கிக்கொண்டிருக்கும். இதனை நீங்
கள் வணங்குவீராக என்று அவர்களை வணங்
கச்செய்து, பின்னர் அவ்விலிங்கத்திற்கு நேர்
கிழக்கில் பொருந்தியுள்ள அமுத வாவியில்
அவர்களை நீராட்ச்செய்து,மேருமலையில் அமுதக்
குடம் வைத்திருந்த உறி அக்குடத்துடன
மிதந்துவந்து அவ்வாவியின் கீழ்க்கரையில

இலிங்கமாக இருப்பதை அவர்கட்குக் கூறி, அதனை வணங்கச்செய்து அமுதகுடம் சிதையும்வண்ணம் பாணம் கோத்துவிட்ட தலத்தினைக்காட்டி, இவ்விடத்திலிருந்து நாம் பாணம் தொடுத்து அமுதகுடத்தைச் சிதைத்தோம். ஆதலால் இது பாணபுரி என்று பெயர்பெறும். இதில் நாம் கோயில்கொண்டு எப்பொழுதும் எழுந்தருளியிருப்போம். இதனையும் வணங்குங்கள் என்று வணங்கச்செய்து, பின்னர் அவர் அக்கன்னியர்களை அழைத்துக்கொண்டு, அமுதகுடத்திலிருந்து கீழே விழுந்த வில்வதளத்திலிருந்து இலிங்கமாகத் தாம் முளைத்துள்ள இடத்தினைக்காட்டி, இவ்விடத்தில் நாம் பாதாளலிங்கேசர் என்னும் பெயருடன் நாகராஜன் பணியும்வண்ணம் கோயில கொண்டெழுந்தருளியுள்ளோம். இதனையும் பணிவீராக என்று அவர்களைப்பணியச்செய்து அவர்களுடன் தென்கீழ்த்திசையிலுள்ள அமுதவாவியை யடைந்து அதனை அவர்களை வலம்வரச்செய்ய, விசுவநாதர் அவர்களுடன் அத்தடத்தின் கீழ்கரையை யடைந்தனர் அப்பொழுது அங்கே முன்னமேயே அமுதகுடத்தின் மேலேயுள்ள தெங்கம்பழம் வீழ்ந்து ஒரு தென்னைமரம் முளைக்கப்பெற்று, அதன் கீழ்

கோயில் கொண்டெழுந்தருளியிருக்கின்ற பரமசிவன் நவகன்னியர்கள் அங்கே வருவதறிந்து தாம் கிழக்குத்திக்குநோக்கி யிருந்தமைவிட்டு, அவர்கள் பொருட்டுமேற்குமுகமாக அவ்வாவியை நோக்கி வீற்றிருந்தார். நவகன்னியர்கள் அதனைக்கண்டு மிக்க வியப்படைந்து விசுவநாதரை வணங்கி, சுவாமி இவ்விலிங்கேசர் இப்பொழுது மேற்குநோக்கி யிருக்கக் காரணம் என்னவென்று வினவினர். அதற்கு விசுவநாதர் கன்னியர்களே நாம் முற்காலத்தில் இங்கே நாரிகேள (தென்னை) மாத்தடியில் தோன்றினேம் இப்பொழுது நீங்கள் இங்கே வருவதறிந்து, உங்களுக்கு அருள் செய்வதற்காக இத்தடத்தினை நோக்கி மேற்குமுகமாக வீற்றிருக்கின்றோம் என்று கூறக் கன்னியர்கள், சுவாமி அங்ஙனமாயின் தேவரீர் இன்றுமுதல் இத்தீர்த்தத்திற்கு அபிமுகம் (நேர்முகம்) ஆக இருந்து அபிமுகேசுவரர் எனும்பெயருடன் யாவர்க்கும் அருள்செய்யவேண்டும் என்று பிரார்த்தித்தனர். அவரும் அங்ஙனமே யாகட்டுமென்று வரமருளி, அவர்களுடனும் அத்தீர்த்தத்தை வலமாக வருகையில், மேல்கரையில் கிழக்குமுகமாகக் கோயில்கொண் டெழுந்தருளியுள்ள ஈசுவரரைக் காட்டி, கன்னியர்களே!

அவ்வமுத கும்பத்தின் மேலே யணிந்துள்ள உபவீதம் (பூணூல்) இவ்விடத்தில் விழ, நாம் உபவீதேசுவரர் என்னும் பெயருடன் விளங் கிக்கொண்டிருக்கின்றோம். நீங்கள் இவரைப் பணிந்து வாழுங்கள் என்றருள் செய்தார். அவர்களும் அங்ஙனமே பணிந்தெழுந்தனர். பின்னர் விசுவநாதப்பெருமான் அக்கன்னியர் களோடும் அத்தீர்த்தத்தின் வடகரையில்வந்து மேற்குமுகமாக இவ்வுலகமுய்யக் கோயில் கொண்டெழுந்தருளி யிருந்தார். நவகன்னி யரும் அவர் அங்கே கோயில்கொண்டருளின மையால், அவருக்கு அருகில் அவ்வமுதவாவி யைப் பார்த்தவண்ணமாகத் தென்திசை நோக் கியிருந்தருளினார்கள்.

ஸ்ரீ சோமேசுவரர் வரலாறு

முற்காலத்தில் பிரமதேவர் பரமசிவனரு ளியவண்ணமே அமுதகுடத்தைத் தாம் வசிக் கும் மேருமலையில் ஒருறியில் வைத்திருந்தார். அப்பொழுது உண்டாகிய பிரளயகாலத்தில், அமுதகுடத்துடன் உறி மிதந்துவந்து கும்ப கோணத்தில் அமுதகுடம் தங்கிய இடத்தி லிருந்து அமுதம்வழிந்து பெருகி நேர்கிழக்கி லுள்ள வாவியில் தங்கியது. அவ்வாவிக்குக்

கீழ்கரையில் உறியானது (சிக்கமானது) தங்கி யோர்லிங்கமானது. அதற்கு சிக்கேசர் என்று பெயராம். அச்சிக்கேசர் சோமேசர் என்று பெயர்பெற்றதைச் சொல்லுகிறேன்.

முன்னொருகாலத்தில் சந்திரன் தேவகுருவையடைந்து அவரிடத்தில் கலைகள் கற்றுவருகையில் ஒருநாள் அவரில்லாதவேளையில் அவருடைய மனைவி தாரை யென்பவளுடன்சேர்ந்து சுகித்திருந்தான். அதனைத்தமது ஞானதிருஷ்டியால் அறிந்த பிரஹஸ்பதி பகவான் சந்திரனை நோக்கி, "நீ குருவின் மனைவியைச் சேர்ந்தாயாதலால், க்ஷயரோகத்தையடைக" என்று சபித்தார். அவர் சாபம் சந்திரனைப் பிடித்துக் கொண்டது. அவன் அதற்கஞ்சி, அவர் பாதங்களில் வீழ்ந்து வணங்கித் தான் அறியாதிபற்றிய பிழையைப் பொறுத்தருள் புரிந்து சாபத்தைப் போக்கியருள வேண்டும் என்று பிரார்த்தித்தான்.

உடனே தேவகுரு கோபந்தணிந்து, தம சிஷ்டனை நோக்கி, நீ அறியாதியற்றிய பிழையைப் பொறுத்தோம். நீ உன் பாவம் நீங்குவதற்காகக் கும்பகோண நகரம் சென்று கும்பலிங்கேசரை வணங்கி, அவர் சன்னிதிக்கு நேர் கிழக்கிலுள்ள அமுதவாவியில் நீராடி அதநடா

கத்தின் கீழ்பால் கோயில் கொண்டெழுந்தருளியிருக்கும் சிக்கேசரையும் வணங்கி, அவர் சந்நிதியில் ஒரு தீர்த்தத்தை யுண்டுபண்ணி, அதில் தினந்தோறும் நீராடி அத்தீர்த்தத்தால் ஈசுவரனையும் அம்பிகையையும் திருமஞ்சனம் செய்து தோத்திரம் பண்ணிவருவாய். அதனால் அப்பெருமான் மகிழ்ந்து உனக்கு நேர்ந்த சாபத்தை நீக்கி அருள்புரிவார் என்று கூறியருளினார்.

சந்திரன் தன்குரு கூறியவண்ணமே, கும்பகோணத் தலத்தை யடைந்து ஆதிகும்பேசுவரரை அடிவணங்கிக் கீழ்பா லமுதவாவியில் நீராடிச் சிக்கேசர் சந்நிதிசென்று அவரையும், உமையாளையும் பணிந்துபோற்றி, அங்கே அவரெதிரில் ஒரு தீர்த்தம் உண்டாக்கி, அதிலதான் நீராடிப் பரிசுத்தமாகத் தீர்த்தம் எடுத்துக்கொண்டு போய், சுவாமியையும் தேவியாரையும் மஞ்சனமாட்டித் துதித்து வருவானாயினன். இங்ஙனம் சந்திரன் பலநாள் பூசை பண்ணிக்கொண்டு வசித்துவரும் நாளில், ஒருநாள் சிக்கேசர் அவனெதிரில் தோன்றி, அன்பனே நீ எதற்காக நம்மைத் துதித்தாய் என்று வினவச் சந்திரன் சுவாமி அடியேன் என்குருவுக்குப் பிழை செய்தேன். அதனால் அவர்

எனக்கு க்ஷயரோகம் வரும்படி சபித்துவிட்டார். நான் அதனால் மிக்க துன்பமடைந்தேன். என்னுடைய துன்பத்தைப் போக்கியாட்கொண்டருளவேண்டும். அன்றியும் நான் உமையைப்பூஜித்தமையால்நீர்சோமேசரென்றும் தேவியார் சோமசுந்தரியென்றும் இத்தீர்த்தம் சோமதீர்த்தமென்றும் நாமம்பெற்று வழங்க வேண்டுமென்று பிரார்த்தித்தான். அவர் அங்ஙனமே அருள்செய்து, நீ குருவுக்குப் பிழை செய்தாயாதலால் அவர் சபித்தார். அவர்சாபத்தால் நீ தேய்வடைவாய். என்னைப் பூஜை செய்தமையால், நீ தினந்தோறும் வளர்ச்சியடைவாய் என்று கூறியருளினர். அன்று முதல் சிக்கேசர் சோமேசர் என்று "அத்தலத்தில் விளங்கிக்கொண்டிருக்கிறர்.

ஸ்ரீ நர்கேசுவரர் வரலாறு.

கும்பகோணத் தலத்தில் வந்து தங்கிய அமுதகுடத்தின் உச்சியில் பிரமதேவரால் வில்வதளம் சூட்டப்பட்டிருந்தது அது பிரளயநீரில் விழுந்து கும்பலிங்கருக்கு ஆக்கிநேய (தென்கிழக்கு) திசையில் வில்வவனமாக ஆக அங்கே இலிங்கம் தோன்றப்பெற்று அங்கே ஈசுவரன் வில்வவனேசர் என்று வழங்கப்பட்டு வந்தார்.

அப்பொழுது இப்பூமியைக் கீழே தாங்கிக் கொண்டிருப்பதற்காக நியமிக்கப்பட்ட ஆதிசேடன் தன்னுடைய ஆயிரம் தலைகளாலும் மாற்றி மாற்றித் தாங்கியும், அவனால் முடியாமல் பரமசிவனை இவ்வுலகத்தைத் தாங்கி நிற்கட்டும் என்று திருக்கைலாயமலையை யடைந்து ஈசுவரனைப் போற்றித் துதிப்பவனாயினான். அப்பொழுது ஈசுவரன் ஆதிசேடனை நோக்கி, நீ எதற்கு என்னைக் குறித்துத் துதித்தாய் என்றுவினவ, ஆதிசேடன் அண்ணலே, இவ்வுலகினைத் தாங்கும் வல்லமை எனக்கு இல்லை. இதனைத் தாங்கமுடியாமல் நான் தவிக்கின்றேன். யாது செய்வேன் என்று விண்ணப்பம் செய்துகொண்டான்.

பரமசிவன் ஆதிசேடன் கூறியவற்றைக் கேட்டு எல்லாச்சாஸ்திரங்களையு மறிந்தவனே, நாம் உனக்கு இவ்வுலகம் தாங்கும் வன்மையைத் தருவோம். நீ ஜம்புத் தீவிலுள்ள கும்பகோணத்தை யடைக. அங்கே நாம் ஆதிகும்பேசர், சோமேசர், கூவிளவனேசர், அபிமுகேசர், விசுவேசர், கௌதமேசர், பாணபுரேசர் என்னும் பல பெயர்களுடன் பல கோயிலகொண்டமர்ந்திருக்கின்றோம் நீ அக்கும்பகோணத் தலத்தினை யடைந்து கூவிளவனேச

ரைப் பூஜை செய்வாய். அங்கே நாம் உனக்கருள் செய்வோம் என்று திருவாய் மலர்ந்தருளினார்.

ஆதிசேடனும் அவர் தனக்கருளியவண்ணமே கைலைமலையினின்றும் புறப்பட்டு நடுவிலுள்ள பல தலங்களிலும் ஈசுவரனைத் தரிசித்து இறுதியாகக் கும்பகோணத்தினை யடைந்து, காவேரி நதியினும் அமுதவாவிகளினும் நீராடி வில்வவனத்தை யடைந்து அசுவத்த தீர்த்தத்தில ஸ்நானம்செய்து, வில்வவனேசரையும் வணங்கிப் பெரியநாயகியாகிய தேவியாரையும் வணங்கித் தன்னிடத்திலுள்ள நாகரத்தினங்கள் கொண்டு அர்ச்சனை பண்ணிப் புகழ்வானாயினன். இவ்வண்ணம் அவ்வாதிசேஷன் பல நாட்கள் செய்துவர, ஒருநாள் ஈசுவரன் அவ்விலிங்கத்தில் மிக்க ஒளியுடன் தோன்றி அவனுக்குக் காட்சியருளினார். அப்பொழுது ஆதிசேஷன்:

சோதியே கருணைவாழ்வே தூயமெய்ஞ்ஞானனந்த
ஆதியே வயலமூர்த்தி யற்புதக் கூத்தாவம்மை
பாதியே பரவுபொன்னிக் குடந்தைக்கீழ்க்கோட்டம்பற்
நீதியே தேவதேவே நின்னடித் துணைகள்போற்றி[றும்

என்று கூறித் துதி செய்வானாயினன்.

அப்பொழுது கூவிளவனேசர், ஆதிசேஷனைநோக்கி அன்பனே, நீ கருதியது நாமறிவோம். உனக்கு இவ்வுலகைத் தாங்கும் வன்மையை யளித்தோம். நீ உன் தலைகளில் ஒரு தலையினால் பல்லாயிரம் யுகங்கள் தாங்கினாலும் உனக்கு எய்ப்பென்பது எய்தாது என்று வரமருளினர்.

அக்காலை நாகர்களுக்கு அரசனான ஆதிசேடன் அவரைப்பணிந்து சுவாமி, அடியேனுடைய பெயரினால் இக்கோவிலும், இதன்கண்ணுள்ள அசுவத்த தீர்த்தமும் தேவரீரும் விளங்கிக்கொண்டு நாகேசுவரம், நாகதீர்த்தம், நாகேசர் என்னும் நாமம் பெறவேண்டும் இங்கே இத்தீர்த்தத்தில் மூழ்கி உம்மை வணங்குகின்றவர்களுக்கு அவர்கள் வேண்டிய பேறெல்லாம் அருளவேண்டும் என்று கேட்டுக்கொண்டான். அவர் அங்ஙனமேயாகுக என்றருளி இலிங்கத்தில் மறைந்தருளினர். அந்த நாக தீர்த்தத்தில் மூழ்குபவர் பாம்பு முதலியவற்றிற்கு அஞ்சவேண்டுவதில்லை. இன்னும் ஈசுவரன் ஆதிசேஷன் விரும்பியவண்ணமே நாகலோகமாகிய பாதாளத்தில் மிக்க பிரகாசத்தைச் செய்துகொண்டு, அங்கு நின்றும் மேற்கிளம்பிக் கூவிளவனத்தில் தோன்றியிருப்ப

தால், பாதாளலிங்கேசர் என்னும் பெயரை யும் பெறுவர்.

ஸ்ரீ அபிமுகேசர் வரலாறு.

அமுதகும்பம் ஆதியில் பிரளயவெள்ளத் தில் மிதந்து வரும்பொழுது, அதன் வாயிலு ள்ள நாளிகேரமானது கும்பேசுவரர் சந்நிதி யின் தென்கிழக்கிலுள்ள அமுதவாவியின் கீழ் கரையில் தங்கி நாளிகேர வனமாக ஆயிற்று. அங்கே ஒரு மரத்தடியில் பரமசிவன் கோயில் கொண்டமர்ந் தருளுவாராயினர். அவருக்கு நாளிகேர ஈசுவரர் என்று பெயர். அவர் பிற் காலத்தில் நவகன்னியர்களும் அமுதவாவியில் தோய்ந்து பாவத்தைத் தொலைக்க விசுவநாத ருடன் வந்திருப்பதையறிந்து கிழக்குநோக்கி யிருந்தவர் அமுததீர்த்தத்திற்கு நேர்முகமாக நோக்கி யிருந்தருளி, நவகன்னியர்க்குக் காட்சி கொடுத்தருளினர். அதுமுதல் அக்கன்னியர் கள் வேண்ட அவர் தீர்த்தத்திற்கு அபிமுக (நேர்முக) மாகவே அமர்ந்தருளுவாராயினர். அதுமுதல் அவர் அபிமுகேசர் என்று பெயர் பெற்றார்.

அவரை அநேகர் பூஜைசெய்து தமது இஷ்டபூர்த்தியை யடைந்துள்ளார்கள். அவ

ருள் காச்மீர தேசத்துள்ள சுதபன் என்னும் பிராமணன் சீலவதியென்னும் பெண்ணைக் கலியாணம் பண்ணிக்கொண்டு பரமசிவனருளால் அவளிடத்தில் ஓர் பெண்ணைப் பெற்றான். அப்பெண் வளர்ந்து தக்க பருவத்தை யடைந்து வாழுநாளில் பூர்வஜன்மத்தில் செய்த வினையால் குட்டநோய் வந்து அவளைப் பீடித்தது. அதனையறிந்த அவள் தந்தை அதனைப் போக்கக்கருதி ஈசுவரனைக்குறித்துத் தவபுரிந்தான் அவனிடத்தில் நாரதர் சென்று சுதபனே; உன்னுடைய தவத்தினால் இக்குட்டை நோய் நீங்காது. நீ உன் மகளுடன் கும்பகோணம் சென்று, தென்கிழக்குத்திசையிலுள்ள அமுதவாவியில் மூழ்கி, அபிமுகேசுவரரைப் பூஜைசெய்தால் இவ்வினை தீரும். நீ கருதியவற்றைப் பெறுவாய் என்றருள் புரிந்தார். அவ்வண்ணமே அவன் சென்று அமுதவாவியில் படிந்து அபிமுகேசுவரரைப் பூஜித்துவந்தான். அதற்கு மகிழ்ச்சியடைந்த ஈசுவரன் அவனுடைய கனவில் வந்து, அன்பனே நீ செய்த பூஜைக்கு மகிழ்ச்சி யடைந்தோம். உன் மகளைப்பற்றிய நோய் ஒழிந்துவிட்டது. நீ அவளை நமது திருமுன்பாக ஒரு பிரமசாரிக்குத் தாரை வார்த்துக் கொடுப்பாயானல், உனக்கு ஒரு புத்திர

னும் பிறப்பான் என்றருள் புரிந்து மறைந்து போயினர் பின்னர் அவன் துயிலுணர்ந்து பார்க்கத் தன் மகள் மிக்க அழகுள்ளவளாக விளங்கக்கண்டு அவ்விடத்திலேயே சத்தியவிரதன் என்னும் ஒரு பிரமசாரிக்குத் தன் மகளைத் தாரை வார்த்துக் கொடுத்தான். அதனால் அவன் ஈசனருளிய வண்ணமே தீர்க்கதவன் என்னும் மகனைப்பெற்று அவ்விடத்திலேயே அபிமுகேசரைப் பலநாள் பணிந்திருந்து பின்னர் தன்னுடைய காச்மீரநகரம்சென்று இனிதே வாழ்ந்திருந்தனன்.

ஸ்ரீகௌதமேசுவரர் வரலாறு.

முன் அமுதகடத்திற்குச் சாத்தியிருந்த பூணூல் கும்பகோணத்தில் அமுதவாவியின் மேல்கரையில் தங்கி உபவீதேசுவரர் என்னும் பெயருடன் விளங்கிக்கொண்டிருந்தது.

அப்பொழுது முனிவர்களில் மேன்மை பொருந்திய கௌதமமுனிவர் தம்மனைவி யகலிகையோடும் இல்லறத்தை நடத்திக்கொண்டு அதற்குறுப்பாகிய விருந்தோம்புதலை மிக்க சிறப்பாகச் செய்துவந்தார் அவருக்குத் தலயாத்திரை செய்யவேண்டும் என்னும் எண்ணம் உதித்தமையால், அவர் தம் மனைவியோடும்

ஸ்ரீபருப்பதம், காசி, கேதாரம் முதலிய தலங்களை முறைப்படி வணங்கிக்கொண்டு தோணிபுரம் என்று மறுபெயர் வாய்ந்த சீகாழியில் வந்து அவ்விடத்துள்ள ஈசுவரனைப் போற்றித் தம்முடைய இயல்பான விருந்தோம்பலைச் செய்து வந்துகொண்டிருந்தார்.

அக்காலத்தில் இவ்வுலகத்தில் சேர்ந்தாற்போலப் பன்னிரண்டு வருடம் மழை பெய்யாமல் ஒரு கொடிய பஞ்சமுண்டாயிற்று. அப்பொழுது யாவரும் உணவின்றித் தவித்து, அநேகர் மாண்டொழிந்தனர். எஞ்சியிருந்தவர் மிகவும் துன்பமுற்றார்கள். அப்பொழுது கௌதமமுனிவர் சீகாழியில் பரமசிவனுடைய அருளினால் நீர் நிறைந்த தடாகம், சோலை, நெல் விளையும் வயல் முதலியவற்றை யுண்டு பண்ணிக்கொண்டு, தம்மை வந்தடுத்த முனிவர்களுக்கு உணவளித்து மகிழ்வித்துக்கொண்டிருந்தார். அதனையறிந்த பஞ்சத்தால் உணவின்றி வருந்திய முனிவர்கள் பலர் தோணிபுரத்தை யடைந்து, கௌதமமுனிவரா லளிக்கப்படு முணவை இனிதாக உண்டு மகிழ்ந்து அங்கே அமர்ந்திருந்தனர். இங்ஙனம் அவர்கள் பலநாள் அங்கே தங்கியிருக்கையில், கௌதமமுனிவர் செய்த அன்னதானத்தின் பல

னால், மழைபெய்து பஞ்சம் நீங்கி, உலகத்தில் எல்லாவிடமும் செழிப்படைந்து அதனால் முனிவர்கள் தம் தம் இடங்களுக்குப் போக வேண்டும் என்று கருதித் தம்கருத்தைக் கௌதமமுனிவருக்கு அறிவித்தார்கள். அவர் முனிவர்கள் பிரிந்துபோவதற்கு இணங்கவில்லை. அதனால் முனிவர்கள் யாவரும் ஒன்றுசேர்ந்து இக்கௌதமர் நம்மை நம்மிடம் போகவிடமாட்டார். ஆதலால் இவரிடத்தில் ஏதாவது பிழையைக் கற்பித்து நாம் இவரை விட்டகல வேண்டும் என்று கருதி, ஒரு மெலிந்த பாயப் பசுவை சிருஷ்டித்து கௌதமரிடம் அனுப்பினார்கள் அவர் அப்பசு மெலிந்திருப்பதை யறிந்து, இது பஞ்சத்தினால் வாடி மெலிந்தது என்று கருதி, அதன் முதுகைத் தடவிக்கொடுத்தார். அவர் கை தன்மேல் பட்டமாத்திரத்தில் அப்பசு உடம்பை நெளித்துக்கொண்டு கீழேவீழ்ந்து இறந்தது. அதனைககண்ட முனிவர்கள் கௌதமரை நோக்கி நீர் பசுவதைசெய்தமையால், இனி நாங்கள் உமது அன்னத்தை ஏற்றுக்கொள்ளமாட்டோம். நாங்கள் எங்களிருப்பிடம் செல்கின்றோம் நீரும் உமது பாவத்திற்குப் பரிகாரம் தேடிக்கொள்ளும் என்று கூறியகன்றனர்.

அப்பொழுது கௌதமர் நாம் பரமசிவனைப் பூஜைபண்ணிக்கொண்டு யாவருக்கு மன்னமளித்துக் கொண்டிருக்கையில் இப்பாவம் நமக்கு எவ்விதம் வந்தடுத்தது என்று ஞான திருஷ்டியாலாராய்ந்து பார்க்க, அது முனிவர்கள் செய்த வஞ்சகமென்றறிந்து அவர்களை நோக்கி முனிவர்களே, நீங்கள் என்னை வஞ்சம் செய்தீர்கள். ஆதலால் உண்மைப்பொருளை யறியாமல் மயக்கங்கொண்டு அதனால் நீங்கள் நரகத்துக்குச் செல்லுவீர்களாக என்று சபித்துவிட்டு, இப்பாவம் தீரும் வழியாதென்று ஆராய்ந்துகொண்டிருந்தார்.

அவ்வேளையில் துர்வாசமுனிவர் அவர் எதிரில் தோன்றி, அப்பனே, நீ பசுவதைசெய்யவில்லை. இருந்தாலும் நீ கும்பகோணத்தலத்தினையடைந்து, அமுதவாவியின் மேல்கரையிலுள்ள உபவீதேசுவரரை வணங்கி வழிபட்டு உன் வினையைத் தொலைத்துவருக என்று கூறியருளினார். கௌதமர் துர்வாசர் கூறியவண்ணமே கும்பகோணத்தையடைந்து, காவிரியில் நீராடி, கும்பேசுவரர் முதலிய ஈசுவரர்களை வணங்கி, உபவீதேசுவரரையடைந்து வணங்கி அவருக்கு மேற்குப் பக்கத்தில் ஒரு தீர்த்தமுண்டாக்கி, அதனால் அவரைத் தினந்தோறும் மஞ்சனமாட்டித் துதித்து மகிழ்வித்தார்.

அவர் துதிக்கு மகிழ்ந்த உபவீதேசுவரர் கௌதமரை நோக்கி அன்பனே, நீ செய்த காரியத்திற்கு மகிழ்ச்சியடைந்தனம். உன்னிடத்தில் ஒரு பாவமும் இனிமேல் நில்லாது. இன்னும் நீ வேண்டும் வரங்களையும் எம்மிடத்தில் கேட்டுக்கொள்ளுக என்றார் அதற்கு கௌதமமுனிவர் அண்ணலே, இத்தீர்த்தம் கௌதமதீர்த்தம் என்றும், தேவரீர் கௌதமேசுவரர் என்றும் விளங்கி யாவருக்கும் அருள் புரிந்துகொண்டிருக்கவேண்டும். என்னை வஞ்சஞ்செய்த முனிவர்கள் நரகடையவேண்டுமென்று பிரார்த்தித்தார். ஈசுவரன் அங்ஙனமேயாகுக என்றருள்புரிந்து மறைந்தருளினர்.

ஸ்ரீ பாணபுரேசுவரர் வரலாறு

மஹாமேருமலையில் பிரமதேவரால வைக்கப்பெற்றிருந்த அமுதகும்பம் பிரளயவெள்ளத்தில் மிதந்துகொண்டு தென்றிசையில், கீழ் சமுத்திரத்திற்கு மேல்பால் ஐந்துயோஜனையளவான தூரமுள்ள இடத்தில், கீழே சமதரையில் தங்க, அதனைக் காணவேண்டி பரமசிவன் கைலாசமலையிலிருந்து கணங்கள் சூழப்புறப்பட்டு வந்தார் அவர் அமுதகுடம் தங்கியிருக்கு மிடத்திற்கு ஒரு கூப்பிடுதூரம் வடகிழ

க்கு திசையில் நின்றுகொண்டு அமுதகுடத்தைச் சேதிக்கக்கருதி, அம்புதொடுத்து எய்தார், அவ்வம்பு, அமுதகுடத்தைச் சேதித்து, அமுதத்தையெங்கும் பரவும் வண்ணம் செய்தது. அங்ஙனம் ஈசுவரன் குடத்தைச் சேதிக்க நின்று பாணம்விட்ட இடம்பாணபுரம் என்று பெயருள்ள தாயிற்று. அதன்கண் அமர்ந்துள்ள ஈசுவரனுக்குப் பாணபுரேசர் என்று திருநாமமாயிற்று.

ஒருகாலத்தில் வங்கதேசத்துக் கரசன் சூரசேனன் என்பவன் ஒருவன் இருந்தான் அவனுக்குக் காந்திமதி என்பவள் மனைவியாய் வாய்த்திருந்தாள். அவள் முதலில அழகுள்ளவளாயிருப்பினும், விதிவசத்தால் குட்ட நோய்க்காளாயினள். அப்பொழுது சூரசேனன் என்னும் அரசன் இதற்கு யாது செய்யலாம் என்று தன்னுடைய புரோகிதரை வணங்கிக் கேட்க, அவர் நீ உன் மனைவியுடன் கும்பகோண நகரையடைந்து, காவிரித்துறையில் நீராடி பாணபுரேசரை வணங்கிவழிபட்டுவரின் இந்நோய் நீங்குவதுடன் நீ கருதியவற்றையும பெறுவாய் என்று கூறினர்.

அவன் தன்புரோஹிதர் கூறியவண்ணமே தன் மனைவியுடன் கும்பகோண நகரையடைந்து காவிரியில் தினந்தோறும் நீராடிப் பாண புரேசரை வணங்கித் துதித்து வந்தனன். அதனால் ஈசுவரன் மகிழ்ந்து, அவன் மனைவியின் குட்டநோய் தீரும்வண்ணம் அருள்புரிந்ததுடன், அவனுக்கு ஒரு நல்ல புத்திரனையும் அருள்செய்து சென்றார். தன் மனைவியின் நோயும் நீங்கிப் புத்திரனையும் அடைந்த அரசன் தன் நகரம் சென்று சுகமாக வாழ்ந்து வந்தான்.

மாலதிவன வரலாறு.

(ஸ்ரீ கமடவிசுவநாதர்)

கும்பகோணத்தலத்தின் எல்லையில் தென்மேற்கில் மாலதிவனம் என்று ஒரு தலமுண்டு. அங்கே முற்காலத்தில் உதயகிரியில் வாழ்ந்து வந்த நிசாகரன் என்னும் பிராமணனுக்குத் தாமதேது என்று பெயர்வாய்ந்த புதல்வன் ஒருவன் இருந்தான். அவன் பரமசிவனிடத்தில் மிக்க அன்புபூண்டவன். அவன் முக்தியடைய வேண்டுமென்று கருதி, அதற்குரிய தலம் எது என்று ஆராய்வானாயினன். கும்பகோணத்தலம் மிக்க மேன்மை பொருந்தியது

என்று கருதி அங்கே வந்தடைந்து, காவிரி, அமுதவாவிகள் முதலியவற்றில் நீராடி, கும்பலிங்கேசர் முதலியவர்களைப் பணிந்து. அங்கே சிலநாள் தங்கியிருக்கையில், அமுதகடேசர் அமர்ந்துள்ள இடத்திற்குத் தென்மேற்காக மாலதிவனம் ஒன்று இருப்பதைக்கண்டு அங்கேசென்று, அதன் வளங்களைக்கண்டு மகிழ்ந்திருக்கையில், அவ்விடத்தில் ஒரு சிவலிங்கம் இருப்பதைப் பார்த்து அதனைப் பூஜைசெய்ய வேண்டுமென்று நினைத்தான். அங்ஙனம் நினைத்து அவன் அங்கேயுள்ள வாருண தீர்த்தத்தில் ஸ்நானஞ்செய்து, அதன்நீரினுல் ஈசுவரனையும் அம்பிகையையும் மஞ்சனமாட்டி, அருச்சித்துப் போற்றிப் புகழ்ந்தான். அங்ஙனம் அவன் பதினுயிரம் ஆண்டுகள் செய்துவருகையில் ஈசுவரனுக்கு அவனிடத்தில் அன்புண்டாகி அவனெதிர்தோன்றி அன்பனே, நாம் மகிழ்ந்தோம். நீ வேண்டும் வரங்களைப் பெற்றுக்கொள்க என்றருளினுர்.

அப்பொழுது தூமகேது சுவாமி அடியேனுக்கு வீடுபேறு அளித்தருளல் வேண்டும். அன்றியும் நீர் விசுவநாதன் என்னும் திருநாமத்துடனும் காட்சிமாத்திரத்தில் அடியவர்

களுக்கு ஆனந்தத்தை யளிக்கும் தேவியார் ஆனந்தவல்லி என்னும் நாமத்துடனும் இவ்வாருண தீர்த்தம் அடியேன் பெயரால் தூமகேது தீர்த்தம் என்னும் பெயருடனும் என்றும் விளங்கவேண்டுமென்று கேட்டுக்கொண்டான். ஈசுவரன் அங்ஙனமே வரமளித்து மறைந்தருளினர். தூமகேது என்பவன் பலநாள் இவ்வுலகத்தில் இன்பத்தை யனுபவித்து இறுதியில் சிவலோகசித்தி யடைந்து நித்தியவாழ்வு பெற்றனன்.

மூர்க்கநாயனர் சரித்திரம்.

தொண்டைநாட்டிலே திருவேற்காடு என்னும் தலத்தில் வேளாளர் மரபில் ஒருவர் பிறந்திருந்தார். அவர் பரமசிவனை பதியென்றும் அவரையடையும் வழியே உலகில் மேலான வழியென்றும் அறிந்து, திருநீறு; உருத்திராக்கம் முதலியன அணிந்து, பஞ்சாக்ஷரத்தை யோதிப் பரமசிவனடியவரைத் தினந்தோறும் திருவமுது செய்வித்து வந்தார். அன்றியும் அவர் அவ்வடியவர்கள் வேண்டும் பொருள்களை யளித்து மகிழ் வடையும் வண்ணமும் செய்தார். அதற்காக அவர் தம்முடைய அடிமை, காணியாட்சியான நிலம், வீடு உள்ளிட்ட மற்

றுமுள்ளபொருள் எல்லாவற்றையும்விற்று அத ஞல் தாம மேறகொண்ட காரியததை இடை யூறின்றி நடத்திவந்தார்

கடைசியாக அவர் அடியவர்களுக்கு அமு தூட்டும் விஷயத்தில் தம்முடைய பொரு ளெல்லாம் இழந்து வறுமையெய்தி யாதுசெய் யலாம் என்று கருதுவாராயினர். அப்பொழுது அவருக்குச் சூதாடத் தெரியுமாதலின், சூதா டிப் பொருள்பெற்று அடியவரை அமுதூட்டு வாராயினர் அங்ஙனம் பலநாட்கள் செய்து வந்தமையால், அத்தலத்தில் சூதாட வருவா ரொருவருமின்மையால், அவ்வூரைவிட்டு அவர் வேற்றூருக்குப் போகக்கருதிப் புறப்பட்டு வழி யிலுள்ள தலங்களில் சிவபெருமானைத் தரி சித்து வணங்கி இறுதியில் திருக்குடந்தைத் தலத்தையடைந்து சூதாடிப்பொருள் தேடுவா ராயினர்.

அவர் சூதாடும்பொழுது முதலில் தாம் தோற்று எதிராக ஆடுபவர்க்கு ஆசையுண்டா க்கி, மறு சூதுகளைத் தாம்வென்று அவர்களு டைய பொருள்களை எடுத்துக் கொள்வார், சூதாட வரமாட்டோம் என்றவர்களையும் சூதில்தோற்ற பொருளைக் கொடோம் என்ற

வர்களையும் சுரிகையை யுருவிக் குத்திவிடுவார். அதனால் அவர் சூதர் என்றும் மூர்க்கர் என்றும் பெயர்பெற்றார். அங்ஙனம் சூதாட்டத்தில் வரும் பொருளால் அடியவர்களை உண்பிப்பாரேயன்றித் தாமொரு சிறிதும் அதிலிருந்து எடுத்துக்கொள்ளார். அவர் அடியவர்களை ஊட்டி அவர்கள் உண்ட சேடத்தைக் கடைப் பந்தியிலிருந்து தாமும் உண்டுமகிழ்வார்.

இங்ஙனம் அவர் பலநாட்செய்து அடியவர்களை அமுதுசெய்வித்த புண்ணியப்பயனால் தீவினைகள் நீங்கப்பெற்று இறுதியில் பரமசிவன் நித்தியவாசம் பண்ணும் கைலாசத்தை யடைந்து நித்திய இன்பத்தை அனுபவித்துக் கொண்டிருந்தார்.

நம்மாழ்வார் அருளிச்செய்த

திருவாய்மொழி.

ஆரா வமுதே யடியே னுடலம் நின்பா லன்பாயே
நீரா யலைந்து கரைய வுருக்கு கின்ற நெடுமாலே
சீரார் செந்நெல்கவரி வீசுஞ்செழுநீர்த் திருக்குடந்தை
ஏரார்கோலந் திகழக்கிடந்தாய் கண்டே னெம்மானே

எம்மானேயென் வெள்ளைமூர்த்தி யென்னை யாள்வானே, எம்மாவுருவும் வேண்டுமாற்றூ லாவாயெழிலேறே, செய்மாகமலஞ் செழுநீர் மிசைகண் மலரும் திருக்குடந்தை, யம்மாமலர்க்கண் வளருகின்றூ னென்னூன் செய்கேனே.

என்நான்செய்கேன் யாரேகளைகண் என்னையென் செய்கின்றாய். உன்னூ லல்லால் யாவராலும் ஒன்றும் குறைவேண்டேன். கன்னூர் மதிள்சூழ் குடந்தைக் கிடந்தாய் அடியே னருவாளுள், சென்னூ ளெந்நாள் அந்நா ளுனதாள் பிடித்தே செலக்காணே.

செலக்காண் கிற்பார் காணுமளவுஞ் செல்லுங் கீர்த்தியாய், உலப்பிலானே யெல்லா வுலகுமுடைய வொருமூர்த்தி, நலத்தால் மிக்கார் குடந்தைக் கிடந்தாய் உன்னைக் காண்பான்நான், அலப்பா யாகாசத்தை நோக்கியழுவன் தொழுவனே.

அழுவன் தொழுவனூடிக் காண்பன் பாடியலற்றுவன், தழுவல் வினையால் பக்கம்நோக்கி நாணிக் கவிழ்ந்திருப்பன், செழுவொண் பழனக் குடந்தைக் கிடந்தாய் செந்தா மரைக்கண்ணூ, தொழுவனேனை யுனதாள் சேரும்வகையே சூழ்கண்டாய்.

சூழ்கண்டாயென் தொல்லைவினையை யறுத்துன்னடிசேரும், ஊழ்கண்டிருந்தே தூராக் குழிதூர்த் தெனைநாளகன்றிருப்பன், வாழ்தொல் புகழார் குடந்தைக் கிடந்தாய் வானேர்கோமானே, யாழினிசையே யமுதேயறிவின்பயனே யரியேறே.

அரியே றேயென் னம்பொற் சுடரே செங்கட் கருமுகிலே, எரியே பவளக்குன்றே நாற்றோ ளெந் தாயு னதருளே, பிரியா வடிமை யென்னைக் கொண் டாய் குடந்தைத் திருமாலே, தரியே னினியுன் சர ணந் தந்தென் சன்மங்களையாயே.

களைவாய் துன்பங் களையா தொழிவாய் களைகண் மற்றிலேன், வளைவாய் நேமிப்படையாய் குடந்தைக் கிடந்தமரமாயா, தளரா வுடல மென்ன தாவிசரிந்து போம்போது, இளையா துனதா ளொருங்கப் பிடித் துப்போத விசைநீயே.

இசைவித் தென்னையுன் தாளிணைக் கீழிருத்து மம்மானே, அசைவி லமரர் தலைவர்தலைவா ஆதிப் பெருமூர்த்தி, திசைவில் வீசுஞ் செழுமா மணிகள் சேருந் திருக்குடந்தை, அசைவி லுலகம் பரவக் கிடந் தாய் காணவாராயே.

வாராய் வருவாய் வருமென் மாயா மாயா மூர்த் தியாய், ஆராவமுதா யடியே னாவி யகமே தித்திப் பாய். தீராவினைகள் தீரவென்னை யாண்டாய் திருக் குடந்தை, ஊரா வுனக்காட் பட்டுமடியே னின்று முழல்வேனோ.

உழலை யென்பிற் பேய்ச்சி முலையூ டவளை யுயி ருண்டான், கழல்க ளவையே சரணாகக் கொண்ட குருகூர்ச் சடகோபன், குழலின் மலியச் சொன்ன வோராயிரத்து ளிப்பத்தும், மழலை தீரவல்லார் காமர் மானேய் நோக்கியர்க்கே.

திருமங்கையாழ்வா ரருளிச்செய்த

திருவெழுக் கூற்றிருக்கை

ஒருபே ருந்தி யிருமலர்த் தவிசில்
ஒருமுறை யயனை யீன்றனை யொருமுறை
இருசுடர் மீதினி லியங்கா மும்மதிள்
இலங்கை யிருகால் வளைய வொருசிலை
யொன்றிய வீரெயிற் றழல்வாய் வாளியின்
அட்டனை மூவடி நானிலம் வேண்டி
முப்புரி நூலொடு மானுரி யிலங்கு
மார்பினின் இருபிறப் பொருமா ணாகி
ஒருமுறை யீரடி மூவுல களந்தனை
நாற்றிசை நடுங்க வஞ்சிறைப் பறவை
ஏறி நால்வாய் மும்மதத் திருசெவி
ஒருதனி வேழத் தரந்தையை யொருநாள்
இருநீர் மடுவுள் தீர்த்தனை முத்தீ
நான்மறை ஐவகை வேள்வி யறுதொழில்
அந்தணர் வணங்குந் தன்மையை ஐம்புலன்
அகத்தினுள் செறுத்து நான்குட னடக்கி
முக்குணத் திரண்டவை யகற்றி யொன்றினில்
ஒன்றி நின்றாங் கிருபிறப் பறுப்போர்
அறியுந் தன்மையை முக்கண் நாற்றோள்
ஐவா யரவோ டாறுபொதி சடையோன்
அறிவருந் தன்மைப் பெருமையுள் நின்றனை

ஏழுல கெயிற்றினில் கொண்டனை கூறிய
அறுசுவைப் பயனு மாயினை சுடர்விடும்
ஐம்படை யங்கையு ளமர்ந்தனை சுந்தர
நாற்றோள் முந்நீர் வண்ணநின் னீரடி
ஒன்றிய மனத்தால் ஒருமதி முகத்து
மங்கைய ரிருவரு மலரென வங்கையின்
முப்பொழுதும் வருட வறிதுயி லமர்ந்தனை
நெறிமுறை நால்வகை வருணமு மாயினை
மேதகு மைம்பெரும் பூதமும் நீயே
அறுபத முரலுங் கூந்தல் காரணம்
ஏழ்விடை யடங்கச் சென்றனை
யறுவகைச் சமயமு மறிவரு நிலையினை
ஐம்பால் ஒதியை யாகத் திருத்தினை
அறமுதனான் கவையாய்
மூர்த்திமூன் றாய் இருவகைப் பயனாய்
ஒன்றாய்விரிந்து நின்றனை குன்றா
மதுபலாச்சோலை வண்கொடிப் படப்பை
வருபுனற் பொன்னி மாமணி யலைக்குஞ்
செந்நெலொண் சழனித் திகழ்வன முடுத்த
கற்போர் புரிசைக் கனக மாளிகை
நிமிர்கொடி விசும்பி விளம்பிறை துவக்கும்
செல்வம் மல்குதென் திருக்குடந்தை
யந்தணர் மந்திர மொழியுடன் வணங்க
ஆடர வமளியி லறிதுயி லமர்ந்த
பரமநின் னடியிணை பணிவன்
வருமிடரகல மாற்றோ வினையே.

இடக்கொண்ட நெஞ்சத் திணங்கிக் கிடப்பன
வென்றும் பொன்னித், தடங்கொண்ட தாமரைசூழும்
மலர்ந்ததண் பூங்குடந்தை, விடங்கொண்ட வெண்பல்
கருந்துத்திச் செங்கட் டழலுமிழ்வாய்ப், படங்கொ
ண்ட பாம்பணைப்பள்ளிகொண்டான் திருப்பாதங்களே

திருமங்கையாழ்வார் அருளிச்செய்த
பெரிய திருமொழிப் பாசுரங்கள்.

ஆவியே யமுதே யெனநினைந் துருகியவரவர்
பணைமுலை துணையாப், பாவியே னுணரா தெத்தனை
பகலும் பழுதுபோ யொழிந்தன நாள்கள், தூவிசே
ரன்னந் துணையொடும் புணரும் சூழ்புனற் குடந்தை
யே தொழுதென், நாவினா லுய்யநான் கண்டுகொண்
டேன் நாராயணாவென்னும் நாமம்

இற்பிறப் பறியீரிவ ரிவரென்னீ ரின்னதோர்
தன்மையென் றுணரீர், கற்பகம் புலவர் களைகணென்
றுலகில் கண்டவா தொண்டரைப்பாடும், சொற்பொ
ருளாளீர் சொல்லுகேன் வம்மின் சூழ்புனற் குடந்தை
யே தொழுமின், நற்பொருள் காண்மின் பாடிநீருய்ம்
மின் நாராயணாவென்னும் நாமம்.

வந்தநாள் வந்தென் னெஞ்சிடங் கொண்டான்
மற்றோர் நெஞ்சறியா னடியேனுடைச், சிந்தையாய்
வந்து தென்புலர்க் கென்னைச் சேர்கொடானிது சிக்
கெனப்பெற்றேன், கொந்துலாம் பொழில்சூழ் குடந்
தைத்தலைக் கோவினைக் குடமாடிய கூத்தனை, எந்தை
யை யெந்தைதந்தை தம்மானை யெம்பிரானை யெத்
தால் மறக்கேனே.

வந்தா யென்மனத்தே வந்துநீ புகுந்தபின்னை
எந்தாய் போயறியா யிதுவே யமையாதோ
கொந்தார் பைம்பொழில்சூழ் குடந்தைக் கிடந்துகந்த
மைந்தா உன்னையென்றும் மறவாமைப் பெற்றேனே.

இங்கே போதுங் கொலோ இன
வேல்நெடுங் கண்களிப்ப
கொங்கார் சோலைக் குடந்தைக் கிடந்தமால்
இங்கே போதுங் கொலோ.

அண்டத்தின் முகடழுந்த வலைமுந்நீர்த் திரைததும்ப ஆஆவென்று, தொண்டர்க்கும்மரர்க்கும் முனிவர்க்குந் தானருளி உலகமேழும், உண்டொத்த திருவயிற்றி னகம்படியில் வைத்தும்மை யுய்யக்கொண்ட. கொண்டற்கே மணிவண்ணன் தன்குடந்தை நகர்பாடியாடீர்களே.

மூவரில் முதல்வனாய் வொருவனை யுலகங்கொண்ட, கோவினைக் குடந்தைமேய குருமணித் திரளையின்பப், பாவினைப் பச்சைத்தேனைப் பைம்பொன்னை யமரர்சென்னிப், பூவினைப் புகழுந்தொண்டர் என் சொல்லிப் புகழ்வர்தாமே.

காவியை வென்றகண்ணார் கலவியே கருதிநாளும், பாவியே னாகவெண்ணி யதனுள்ளே பழுத்தொழிந்தேன், தூவிசே ரன்னமன்னுஞ் சூழ்புனற் குடந்தையானைப், பாவியேன் பாவியாது பாவியே னாயினேனே.

அன்றாயர் குலமகளுக் கரையன் றன்னை
யலைகடலைக் கடைந்தடைத்த வம்மான் றன்னைக்
குன்றாத வலியரக்கர் கோனை மாளக்
கொடுஞ்சிலைவாய்ச் சரந்துரந்து குலங்களைந்து
வென்றானைக் குன்றெடுத்த தோளினானை
விரிதிரைநீர் விண்ணகரம் மருவிநாளும்
நின்றானைத் தண்குடந்தைக் கிடந்த மாலை
நெடியானை யடிநாயேன் நினைந்திட் டேனே

திருமழிசையாழ்வார் திருவாய் மலர்ந்தருளிய

திருச்சந்த விருத்தம்.

இலங்கை மன்னனைந்தொடைந்து பைந்தலை நிலத்துகக். கலங்கவன்று சென்றுகொன்று வென்றிகொண்ட வீரனே, விலங்கு நூலர் வேதநாவர் நீதியான கேள்வியார், வலங்கொளக் குடந்தையுள் கிடந்தமாலு மல்லையே.

சங்கு தங்கு முன்கைநங்கை கொங்கை தங்கலுற்றவன், அங்கமங்கவன்றுசென் றடர்த்தெறிந்த வாழியான், கொங்குதங்கு வார்குழல் மடந்தையார் குடைந்தநீர், பொங்குதண் குடந்தையுள் கிடந்த புண்டரீகனே.

மரங்கெட நடந்தடர்த்து மத்தயானை மத்தகத்து, உரங்கெடப் புடைத்தொர் கொம்பொசித்துகந்த வுத்தமா, துரங்கம்வாய் பிளந்துமண் ணளந்தபாத வேதியர், வரங்கொளக் குடந்தையுள் கிடந்தமாலு மல்லையே.

சாலிவேலி தண்வயல் தடங்கிடங்கு பூம்பொழில்
கோலமாட நீடுதண் குடந்தைமேய கோவலா
காலநேமி வக்கரன் கரன்முரன் சிரம்மவை
காலனோடு கூடவிற் குனித்தவிற்கை வீரனே.

செழுங்கொழும் பெரும்பனி பொழிந்திட வுயர்ந்தவேய், விழுந்துலர்ந் தெழுந்துவிண் புடைக்கும் வேங் கடத்துள்நின்று, எழுந்திருந்து தேன்பொருந்து பூம்பொழில் தழைக்கொழும், செழுந்தடங் குடந்தையுள் கிடந்தமாலு மல்லையே.

நடந்தகால்கள் நொந்தவோ நடுங்கஞால மேனமாய்
இடந்தமெய் குலுங்கவோ விலங்குமால் வரைச்சுரங்
கடந்தகால் பரந்தகா விரிக்கரைக் குடந்தையுள்
கிடந்தவா றெழுந்திருந்து பேசுவாழி கேசனே.

இரண்டாந்திருவந்தாதி

எங்கள் பெருமா னிமையோர் தலைமகன்நீ, செங்கண் ணெடுமால் திருமார்பா பொங்கு, படமூக்கி லாயிரவாய்ப் பாம்பணைமேல் சேர்ந்தாய், குடமூக்கில் கோயிலாக் கொண்டு.

இரண்டாவது
விஷ்ணு ஆலயங்கள்.

ஸ்ரீ கோமளவல்லியின் வரலாறு.

முற்காலத்தில், சரசுவதி நதிக்கரையில், முனிவர்கள் யாவரும் ஒன்றுதிரண்டு ஒருயா

கம் செய்யத்தொடங்கினர். அவர்கள், நாம் யாரைக்குறித்து யாகம்செய்வது என்று ஆராயத்தொடங்கினர். அவருள் சிலர், பிரமதேவரைக் குறித்துச் செய்யவேண்டும் என்றும் சிலர், சிவனைக்குறித்துச் செய்யவேண்டும் என்றும் சிலர் விஷ்ணுவைக் குறித்துச் செய்யவேண்டும் என்றும் கூறினார்கள். அவர்களுக்குள் யார் விசேஷமாகச் செய்வது என்று நிச்சயமேற்படவில்லை. அம்முனிவர்கள், தங்களுள் பிருகு முனிவரை நோக்கி, முனிவரே! நீர்தாம், எங்களுடைய சந்தேகத்தைப் போக்கவேண்டும் என்று வேண்டிக்கொண்டனர்.

அம்முனிவர், தாம் நேரில்போய் அம்மூன்று கடவுளருடைய குணங்களையும் அறிந்து வருவதாக அவர்களிடத்தில்கூறிச் சத்தியலோகத்தையடைந்து பிரம்மதேவர் சந்நிதி முன்புபோய் நின்றனர். அவர் தம்முடைய குமாரனை பிருகு வந்திருப்பதைச் சிறிதும், மதிக்கவில்லை. அலக்ஷியமாக இருந்தார். பிருகு பார்த்து, ஓ இவர் செல்வச்செருக்குள்ளவராக இருக்கிறார். என்னை ஏழை என்று கருதித் தம்முடைய குமாரன் என்றும் நினையாமல் என்னை வரவேற்கவில்லையே என்று கருதிக்

கொண்டு அவ்விடத்தைவிட்டு நீங்கிக் கைலை மலையை யடைந்தனர்.

அவர் வரும் வேளையில் பரமசிவன் பார்வதி தேவியுடன் அந்தப்புரத்தில் தனிமையாக இருந்தார் அம்முனிவர் கைலாசத்தின் திருவோலக்கத்தில் சென்று பரசிவனைக்காணுமல் சண்டீசுவரரை நோக்கிப் பரமசிவன் எங்கே என்று வினவினர் அவர். பரமசிவன் அந்தப்புரத்தில் இருப்பதாகக்கூற முனிவர் அங்கே சென்றனர் பரமசிவன், முனிவர் வந்ததை யறிந்து, நாம் இரஹஸியமாக இருக்கையில் இங்கே இவன் எப்படி வரலாம் என்றுசினந்து, திரிசூலத்தைக் கையிலெடுத்துக்கொண்டு முனிவரை நோக்கித் துரத்திக்கொண்டு வந்தார். முனிவர் அவரைக்கண்டு ஓடினர். முனிவர் ஓடப் பரமசிவன் துரத்த இருவரும் வெகுதூரம் சென்றபிறகு, முனிவர், ஒருகாட்டில் நுழைந்து மறைந்துகொண்டுவிட்டார். பரமசிவன் அவரை அங்கே காணுமல் திரும்பி வந்தார்

பிறகு முனிவர், அவ்வனத்தில் மூன்று நாள் தங்கியிருந்து வெளிப்பட்டு திருப்பாற் கடலை யடைந்தனர். அங்கே அவர் விஷ்ணு இருக்குமிடத்தையடைந்து பார்க்கையில், ஸ்ரீ

மஹாவிஷ்ணு, சேஷசயனத்தில் மஹாலக்ஷ்மி அடிவருடப் பள்ளிகொண்டிருந்தார் அதனைக் கண்ட முனிவர் மிக்க கோபங்கொண்டு, நாம் வந்திருக்கையில், இவன் எழுந்திருந்து நம்மை உபசரிக்கவில்லையே, பெரியோர்வரும்பொழுது படுத்துக்கொண்டிருத்தல் தகாது என்பதை இவன் அறியவில்லையே. ஆ! இவனுக்கு என்ன செருக்கு என்று கூறிக்கொண்டே, மஹாவிஷ்ணுவின் மார்பில் தம் காலாலுதைந்தார். அது மஹாலக்ஷ்மியின் இருப்பிடம், அது கலங்கிவிட்டது. இலக்ஷ்மியும், மனத்தில் சிறிது வருத்தமடைந்தாள். முனிவர் தம்மை உதைத்தவுடன் திருமால் திடுக்கிட்டவர்போல எழுந்திருந்து முனிவர் அடிகளில்வீழ்ந்து வணங்கி முனிவரே, நீர் முனிந்தருளவேண்டாம். நீர் வந்ததை யானறியேன் என்னுடைய கடுமையான மார்பில் உதைத்தமையால் உமது கால்கள் நோகும். என்று அவருக்கு உபசார மொழிகள்கூறி மஹாலக்ஷ்மியை நோக்கி முனிவர்க்கு அர்க்கிய பாத்தியங்கள் கொடுப்பதற்கு நீர் கொண்டுவரக் கூறினார். அவளும் அவ்விதமே கொண்டுவந்து கொடுத்தாள். திருமால் முனிவருக்கு வேண்டிய உபசாரங்கூறி அவருடைய முனிவையாற்றி இனிமையாகப் பேசியிருந்து அவரையனுப்பிவிட்டார்.

பிருகு முனிவர் சரசுவதி நதிக்கரையை யடைந்து, மற்றைய முனிவர்களுக்குத் தாம், மூவரிடத்திலும்போனதையும், அவர்களுடைய செயலையுங்கூறி அம்மூவருள் யாரைக்குறித்து யாகம் செய்யவேண்டியது என்பதை நீங்களே தெரிந்துகொள்ளுங்கள் என்றுவிடுத்தார். அவர்கள் ஸ்ரீ மஹாவிஷ்ணுவே சத்வகுணமுடையவரென்று மேலேகூறிய விருத்தாந்தத்தால் தெரியவருவதால் அவரைக்குறித்தேயாகம்செய்ய வேண்டும் என்று தீர்மானம் பண்ணிக்கொண்டு அங்ஙனமே செய்தார்கள்.

அங்கே திருப்பாற்கடலில் ஸ்ரீ மஹாலக்ஷ்மி, திருமாலைவணங்கி, சுவாமி! அம்முனிவர் உம்முடைய திருமார்பில் உதைத்தனரே, அது என்னுடைய தலமல்லவா? அவருதையால் நான் கலங்கிவிட்டேனே. அபசாரப்பட்ட அம்முனிவரை நீர் கடிந்துகொள்ளாமல் உபசாரங்கள் செய்தீரே, என்னையும், அவர் காலைக்கழுவ நீரைக்கொண்டுவரச்சொன்னீரே. அதனால் உமக்கு என்னிடத்தில் அன்பில்லை என்று தெரிகிறது. நான் இனி க்ஷணமும், இவ்விடத்தில இரேன் என்று கோபித்துக் கொண்டு, அவ்விடத்தைவிட்டு நீங்கிவிட்டாள். பிறகு அவள், தன்னுடைய ஒரு (நீலா என்

னும்) அம்சத்தினால் கோல்ஹாபுரம் மஹா
ராஜாவுக்குப் புத்திரியாகவந்து பிறந்தாள்.
அவனுக்கு அவ்வரசன் பத்மாவதி என்றுபெய
ரிட்டு வளர்த்துவந்தான். ஸ்ரீ மஹாவிஷ்ணு
லக்ஷ்மி தன்னைவிட்டுப் பிரிந்தபிறகு, அவளு
டைய அம்சத்தினால் பத்மாவதியாகப் பிறந்தி
ருப்பதையறிந்து, வேங்கடாத்ரியில் (திருப்பதி
யில்) வந்து ஸ்ரீநிவாசன் என்னும் பெயருடன்,
பத்மாவதியை மணஞ்செய்துகொண்டார்.

இது இங்ஙனமாக நாரதர், ஸ்ரீ தேவியி
டம்சென்று தேவியே, ஸ்ரீமஹாவிஷ்ணு உன்னை
அலக்ஷியம் செய்துவிட்டுக் கோல்ஹாபுரம் அர
சன்மகள் பத்மாவதியைக் கலியாணம் பண்ணி
க்கொண்டு வேங்கடாத்ரியில் சுகமாக இருக்கி
றார். என்றுகூற லக்ஷ்மிதேவியானவள், விஷ்
ணுவிடமும் பத்மாமதியிடம் கோபங்கொண்டு
அவர்களுக்குத் தீங்குசெய்யவெகு விரைவாக
வந்துகொண்டிருந்தாள். நாரதர் அவளுக்கு
முன் விரைவாகத்திருப்பதி ஸ்ரீநிவாசனிடத்தில்
லக்ஷ்மி கோபத்துடன் வருவதைக்கூறி, நீர்
இப்பத்மாவதியை எங்கேயாவது ஒளித்துவை
த்துவிட்டு நீரும் தெற்கே ஓடி ஒளிந்துகொள்
ளும் என்று கூறினார். ஸ்ரீநிவாசன் நாரதர்
கூறியவண்ணமே, தம்முடைய ஒரு அம்சத்தி

னல் அங்கே அவள் பக்கத்தில் இருந்து பத்மாவதியை மலையின் அடிவாரத்தில் ஒளித்து வைத்துவிட்டு தாமும் தெற்கு நோக்கியோடினார்.

மஹாலக்ஷ்மி, அவள் ஓடுவதைக்கண்டு பின்தொடர்ந்து சென்று, இருவருமாக ஓடி தமிழ்நாட்டில் காவிரியின் கரையிலுள்ள கும்பகோண க்ஷேத்திரம் வந்தவுடன் திருமால் காணாமல் மறைந்துவிட்டார், ஸ்ரீ மஹாலக்ஷ்மியோ அவரைக் காணாமையால் கும்பகோணத்தலத்தினையடைந்தவுடன் அது ஐந்து கூப்பிடுதூரம் அமுதம் பரவிய இடமாதலால், அவ்விடத்தின் மஹிமையால், மகாலக்ஷ்மி, கோபம் நீங்கித்தான் திருமாலிடத்தில் கோபம் கொண்டது தவறு என்று அறிந்து, அத்திருப்பாற்கடலில் அவரிடத்தில்தான் எவ்விதமிருந்தாளோ, அவ்விதமே திரும்பவும் அவரிடத்தில் அவருடைய மார்பில் இருக்கவேண்டும் என்று கருதி அதன்பொருட்டுத் தவம் செய்யவேண்டும் என்று நினைத்தாள்.

அப்பொழுது ஆதிகும்பேசுவரருக்கு நேர் எதிரிலுள்ள அமுதவாவியில், தெய்வத்திருவருளால், பொன்மயமான தாமரை மலர்ந்திருப்பதைக்கண்டு அவ்வாவியிலுள்ள அம்மலரில்நின்று

தான் ஸ்ரீமஹாவிஷ்ணுவை நாயகனாக அடைய வேண்டும் என்று கருதித் தவம் செய்துகொண்டிருந்தாள். அதுமுதல், அவ்வாவி தன்னிடத்தில் பொன் மயமான தாமரையுண்டானமையால் பொற்றாமரை என்று பெயர் பெறுவதாயிற்று.

இது இவ்வாறிருக்க, பிருகுமுனிவர் தாம் மஹாலக்ஷ்மியின் ஸ்தானமாகிய திருமாலின் மார்பில் உதைத்து, அவ்விருவரிடத்திலும் அபசாரப்பட்டு விட்டதாகக்கூறி, மனத்தில் மிக்க துன்பமுள்ளவராக ஆயினர். அவர், அவ்வபசாரத்தைப் போக்குவதற்கு ஸ்ரீ மஹாலக்ஷ்மியையே மகளாக அடைந்து, அவளை ஸ்ரீ மஹாவிஷ்ணுவுக்குத் திருமணம் செய்து கொடுக்கவேண்டுமென்று கருதினர். அதற்கு அவர் திருமாலைக் குறித்துத் தவம் செய்யவேண்டும் என்று கருதிக்கொண்டிருந்தார். அவர் அந்த ஜன்மம் நீங்கினபிறகு மறுஜன்மத்தில் குஹன் என்ற பெயருடன், சிருங்கிபேரபுரத்தில் வேடர் தலைவனாகப்பிறந்து ஸ்ரீராமனுக்குத் தோழனாக இருந்து, அப்பிறப்பையும் ஒழித்து மறு பிறப்பில் மேருமலையிலுள்ள, காஞ்சனன் என்னும் முனிவர்க்கு ஹேமன் என்னும்பெயர் கொண்ட குமாரனாகப் பிறந்தார்.

அவர் முன் ஜன்ம வாசனையால், ஸ்ரீமஹா விஷ்ணுவைக்குறித்துத் தவம்செய்தார் ஸ்ரீ மஹாவிஷ்ணு அவரெதிரில் தோன்றி, அன்பனே! நீ, கும்பகோணத்தலம்சென்று, அங்கே நம்மைக் குறித்துத் தவம்செய்க, உன்னுடைய மனோரதம் நிறைவேறும், என்றுகூறியருளினர். ஹேமமஹரிஷியும் அவர் கூறியவண்ணம் பல திருப்பதிகளிலும் ஸ்ரீ மஹாவிஷ்ணுவைச்சேவித்துக்கொண்டு, இறுதியில் கும்பகோணத்தை யுற்றுப் பொற்றாமரையையடைந்தார் அங்கே பொற்றாமரை மலரில் ஒருபெண் தவம்செய்து கொண்டிருப்பதைக்கண்டு அவளை நெருங்கிப் பெண்ணே நீ யார்? யாதைக் கருதித்தவம் செய்கின்றாய்? என்று வினவினார். அதற்கு மஹாலக்ஷ்மி, முனிவரே! நான் யார் என்று கூறுவேன்! எனக்குத் தாய்தந்தை உற்றார் உடன்பிறந்தார் ஒருவருமில்லை. நீரே எனக்குத் தந்தையாக இருக்கவேண்டும். நான் ஸ்ரீமஹாவிஷ்ணுவைநாயகராக அடையவேண்டுமென்று கருதித் தவம் செய்கின்றேன். நான் உம்மைத் தந்தையாகக் கருதிவிட்டமையால், நீரும் உம்முடைய மகளாகிய என்னுடைய மனோரதம் நிறைவேறவேண்டுமென்று தவம் செய்யும் என்று கூறியருளினள்.

ஹேமமுனிவர், அப்பெண்ணைத் தம்முடைய மகளாராகவே கருதி, மனத்தில் அன்பு மேலிட்டு, அவளைத் தடவிக்கொடுத்தார். அவளுடைய சரீரம் மிகவும் மிருதுவாக இருந்தமையால், கோமளை என்று நாமகரணம்செய்து, தாம், பொற்றாமரையின் வடகரையில் இருந்து திருமாலைக் குறித்துத் தவம் செய்துகொண்டிருந்தார்.

ஸ்ரீ ஆராவமுதன் வரலாறு

முற்காலத்தில், பிரம்மதேவரும் சூரியனும் தனித்தனியாக ஸ்ரீ மஹாவிஷ்ணுவைக் குறித்துத் தவம் செய்தார்கள். அவர்களுடைய தவத்திற்கு மகிழ்ந்த விஷ்ணு, மூன்று விமானங்களை மனத்தினால் சிருஷ்டித்து அவற்றில் தாம் ஒருவரே சேஷசயனத்தில் பள்ளி கொண்டவராக, இருந்துகொண்டு, ஒரு விமானத்தை ஸ்ரீ வைகுண்டத்திலேயே வைத்துவிட்டு மற்ற இரண்டையும் எடுத்துக்கொண்டுவந்து, பிரம்மதேவருக்கு ஒன்றும் சூரியனுக்கு ஒரு விமானமும் கொடுத்து நீங்கள் இவ்விமானத்தில் நம்மை யாராதித்துக்கொண்டிருங்கள். உங்களுடைய மனோரதங்கள் எல்லாம் நிறைவேறும் என்றுகூறி மறைந்தருளினார். அவ்விருவரும் தமக்குத் தமக்குக்கிடை

த்த விமானத்தில் விஷ்ணுவை ஆராதித்துக் கொண்டிருந்தார்கள். பிறகு, அவ்விமானம் இரண்டும், சூர்யவம்சத்திலுதித்த இக்ஷ்வாகு அரசனிடம்வந்து சேர்ந்தது. அவன் அவற்றைப்பெற்று அயோத்திசென்றுசரயுநதிக்கரையில் பிர்திஷ்டை செய்தான். அங்கே அவ் விமானங்களிரண்டும் ஒன்று சேர்ந்து பேதமின்றி ஆகிவிட்டன. அதன்கண் பள்ளிகொண்டருளிய பரமனையே சூர்யவம்சத்தரசர்கள் ஆராதானம் செய்துவந்தார்கள். ஸ்ரீராமன் அவ்விமானத்தை விபீஷணஆழ்வார் பொருட்டுகொடுத்தார். ஸ்ரீ விபீஷணன் அதனைப் பெற்று இலங்கைக்குப்போகையில், நடுவழியில் காவேரிக்கரையில், நிசுளாபுரி என்ற உறையூருக்கு அருகில் கீழேவைத்தான். பிறகு அவ் விமானம் அசைக்கமுடியவில்லை. அவன், அதன்கட் பள்ளிக்கொண்டருளிய பங்கயக் கண்ணனைத் துதிக்க, அவர் நாம், இங்கே இரு காவேரிக்கும நடுவில் நித்யவாசம் பண்ணப் போகிறோம். இங்கே, நமமை ஸேவிக்கவேண்டுமென்று தர்மவர்மா முதலியவர்கள் நெடுநாளாகத்தவம் செய்கின்றனர். அவர்களுடைய எண்ணத்தை நிறைவேற்றிவைக்கவேண்டும். அன்றியும், இத்தலததிற்குக் கிழக்குத்திசையில்

ஸ்ரீ மஹாலக்ஷ்மியும், ஹேமமுனிவரும் நம்மைக்கருதித்தவம் செய்கின்றார்கள். அவர்களுக்கும் காட்சிகொடுத்தருளவேண்டும் ஆதலால் நாம் இங்கேயே சந்திரபுஷ்கரணி தீரத்தில் இருப்போம். நீ இலங்கைசென்று இராஜ்ய கார்யத்தைப் பார்த்துக்கொண்டிருந்து வருடத்திற்கொருமுறை நம்மை இங்கேவந்து ஆராதித்துச் செல்க. நாம் இங்கே இருந்துகொண்டே வேண்டியவரங்களை யளிப்போம் என்று கூறி விபீஷணனை அனுப்பிவிட்டுத் தாம் அங்கேயே யிருந்தார்

பிறகு கொஞ்சகாலம் கழிந்தவாறே, இரண்டும் ஒன்றாகச் சேர்ந்திருந்த விமானங்களிரண்டும், தனித்தனியாகப் பிரிந்தது. அவற்றுள் விஷ்ணுவால் பிரமதேவனுக்கு அருளப்பெற்ற ஸ்ரீரங்கவிமானம் அங்கே சந்திரபுஷ்கரணிக் கரையில் இருக்க, சூரியனுக்கு அருளப்பட்ட அமல சம்ஸ்தானம் (குறைவின்றி யமையப்பெற்றது) என்னும் விமானம் காவேரிக்கரை வழியாகக் கிழக்குநோக்கிப் புறப்பட்டது. அப்பொழுது தேவர்கள் மலர்மழை பொழிந்தனர். துந்துபி முழங்கிற்று, விண்ணவரும் மண்ணவரும் ஆனந்தத்தால் ஆரவாரம் செய்தனர் அங்ஙனம் புறப்பட்ட விமானம்,

கும்பகோணத்தை யடைந்து பொற்றாமரைத் தடாகத்தின் கீழ்கரையில் மகாசங்கிரமணகாலத்தில்.(தைமாசப்பிறப்பு சங்கிராந்திகாலத்தில், விருஷப லக்கினத்தில் மத்தியான வேளையில், வந்து தங்கிற்று அவ்விமானத்தில் ஸ்ரீமஹாவிஷ்ணு கோடி சூரியப்பிரபையுடன் சங்கு, சக்கரம், சாரங்கம், பீதாம்பரம் இவற்றைத் தரித்துக்கொண்டு மிக்கதேஜோமயமாய் விளங்கினர்.

அப்பொழுது, ஹேமமுனிவர், தம்முடைய மனத்தில தோன்றிக்கொண்டிருந்த பரஞ்சோதி மறைந்ததைக்கண்டு வெளிநோக்கிப் பார்க்க, அங்கே விமானத்தில் சூரியோதயம்போல விளங்குகின்ற திருமாலைக் கண்டு, எழுந்து அடிபணிந்து போற்றிப் புகழ்ந்தனர். ஸ்ரீ மஹாலக்ஷ்மியும் விமானத்துடன் தோன்றிய விஷ்ணுவை வணங்கித் துதிப்பாளாயினள் இவ்விருவர் புகழ்ச்சிக்கும்,மகிழ்ச்சியுற்ற மஹாவிஷ்ணு அவர்களை நோக்கி, நீங்கள் நெடுநாளாகத் தவஞ்செய்து உடல் வாடினீர்கள். முனிவரே, நீர் மேருமலையில் நம்மைக்குறித்துத் தவஞ் செய்தீர். நாம் இங்கே உம்மை வரக் கூறினேம். நீர் இங்கே வந்து, திருமகளாரை உமது மகளாகப் பெற்றீர். ஸ்ரீமஹாலக்ஷ்மி

யையே மகளாகப்பெற்ற உமக்கு யாது குறை யுளது. இருந்தாலும் உமக்கு வேண்டியவற்றை எம்மிடம் கேட்க. தருவோம் என்றருளினார்.

உடனே முனிவர், திருமால் எதிர்நின்று, என் ஐயனே! எனக்கு நிகராவார் ஒருவரும் இல்லை. நான் முற்காலத்தில் உங்களிருவரிடத்திலும் அபசாரப்பட்டு விட்டேன். அதனை நீங்களிருவரும் க்ஷமித்தருளவேண்டும். நான் இக்கோமளக்கொழுந்தினை என்னுடைய மகள் என்று கருதிவந்துள்ளேன். தேவரீரும் அங்ஙனமே பணித்தருளினீர். ஆதலின், நீர் என்னுடைய மாமலர்மன்னிய மங்கையை மணந்தருளி, யாவரையும் வாழ்வித்தருளவேண்டும். உங்களிருவருடைய சேர்த்தியையும் அடியேன் கண்குளிரப்பார்க்கவேண்டும். முடிவிலெனக்கு மோக்ஷத்தையும் தந்தருளவேண்டும் என்று பிரார்த்தித்தார்.

சாரங்கபாணியாகிய எம்பெருமான் முனிவருளிய வண்ணமே, திருமகளாரைக் கடிமணம்புரிய மனத்தில் கருதினார். அவ்வேளையில தேவர்கள் அவ்விடத்தைப் பலவிதமாகவும் அலங்கரித்தனர். அப்பொழுது அவ்விடத்தில் ஹேமமுனிவர் கோமளவல்லியாரை,

ஸ்ரீ மஹாவிஷ்ணுவுக்குக் கலியாணம் செய்து கொடுத்தனர். யாவரும் அவர்களுடைய திருமணக் கோலத்தைக்கண்டு ஆனந்தமடைந்தனர். ஸ்ரீமஹாலக்ஷ்மி, தான் நீடித்தகாலமாகத் திருமாலைப் பிரிந்திருக்க நேர்ந்தமையால். இப்பொழுது தான், முன் வைகுண்டத்தில் அவருடைய திருமார்பில் இருப்பதுபோல இருக்க வேண்டுமென்று கருதித் திருமாலின் திருமார்பைத் தமது இடமாகக்கொண்டு கோமளவல்லியானவள் மிக்க பொலிவுள்ளவளாக விளங்கினாள். இனி, அகலகில்லேனிறையுமென்று அலர்மேல் மங்கையுறை மார்பனை யாவரும் கண்டுகண்படைத்ததனாலாகியபேற்றையடைந்தனர். அப்பொழுது அப்பெருமானைக்கண்ட முனிவர்களும், தேவர்களும், மற்றுமுள்ள யாவர்களும் திருப்தியடையாமல், இவர் நமக்கு ஆராவமுத மாவார் என்று கொண்டாடினார்கள். அதுமுதல் அப்பெருமானை யாவரும் ஆராவமுதன் என்றே துதிப்பாராயினர்.

பிறகு எம்பெருமான் ஹேமமுனிவர்க்கு முத்தியளித்துத் தாம் அமலசம்ஸ்தானமாகிய விமானத்தில் பள்ளிகொண் டருள்வாராயினார். தேசமெல்லாம் உய்யவந்த கோமளவல்லிப்பிராட்டியாரைத் தமது விமானத்தில் வலது பக்கத்

தில் கோயில்கொண்டு தன்னை வந்து வணங்கி வழிபடு மடியார்களுக்கு வாழ்வு தந்தருளுமாறு கூறியருளினர். கோமளவல்லியாரும் அங்ஙனமே கோயில்கொண் டெழுந்தருளி யாவரையும் வாழ்வித்தருளுகின்றாள்.

இரண்டு பெரிய வாயில்களின் வரலாறு

முற்காலத்தில், உத்தராயணத்திற்கும் தக்ஷிணாயணத்திற்கும் அதிதேவதைகளாகிய இருதேவர்கள் வைகுண்டநாதனை யடைந்து, தங்களிருவரையும் சமநிலையில் வைத்தருளுமாறும்; உலகத்தவர் தம்மைக் கொண்டாடுமாறும் செய்தருள வேண்டுமென்று பிரார்த்தித்தனர். அவர்களை நோக்கி வைகுண்டநாதன், நீங்கள் பூலோகத்தில் காவிரிக்கரையிலுள்ள கும்பகோணத் தலத்தினை யடைந்து, அவ்விடத்தில் அமல சம்ஸ்தானம் என்னும் விமானத்திலுள்ள நம்மைப்போய்ச் சேவியுங்கள், உங்களுடைய எண்ணப்படியே நாம் அங்கே செய்கின்றோம் என்று அருள்செய்தார்.

அவ்வுத்தராயண தக்ஷிணாயன தேவர்களிருவரும் பகவான் அருளியவாறே கும்பகோணத்தினை யடைந்து, அமல சம்ஸ்தான விமானத்தில் எம்பெருமான் அறிதுயிலமர்ந் தருளு

வதைக் கண்குளிரக் கண்டு, கோமளவல்லித் தாயாரையும்சேவித்து, எம்பெருமானைநோக்கி சுவாமி, நாங்கள் வைகுண்டவுலகத்தில் தேவரீரிடத்தில் விண்ணப்பித்துக் கொண்டவண்ணம், எங்களைப் பணிகொண்டருளுமாறு வேண்டுகின்றேம் என்று பிரார்த்திததனர். அதற்கு ஆராவமுதப்பெருமான், அவர்களைநோக்கி, நீங்களிருவரும் நம்முடைய இந்திர விமானத்திற்கு இருபக்கங்களிலும் நின்றுகொண்டு, நம்மைச் சேவிக்க வருமவர்களுக்கு வழிகொடுத்துக் கொண்டிருங்கள். அதனல் உங்களுக்குள் சமநிலை ஏற்படும், உத்தராயணமாகிய ஆறுமாதங்களிலும் உத்தராயண வாயில் வழியாகவும், தக்ஷிணாயன ஆறுமாதங்களிலும் தக்ஷிணாயன வாயில்வழியாகவும் நம்மைவந்து ஸேவிப்பவர்களுக்கு இம்மையில் அவரவர்கள் வேண்டிய பேறுகளையெல்லாம் கொடுத்து, முடிவில் மோக்ஷ வுலகத்தையும் கொடுத்தருளுவோம் என்று கூறியருளினர். அவர்களும் அவ்விதமே விமானத்தின் இருபுறங்களிலும் வாயில்களாக இருந்துகொண்டு, பதுமநாபனுக்குப் பணிவிடை புரிகின்றனர்.

அவற்றுள் தக்ஷிணாயன வாயில்வழியாகச் சென்று ஆராவமுதன் கோமளவல்லியைக் கலி

யாணஞ் செய்துகொண்டாராதலின், அவ்வாயில் கலியாணவாயில் என்று பெயர்பெறும். கும்பகோண நகரமும், ஆராவமுதன் கோமளவல்லியைக் கலியாணம் செய்துகொண்டகாரணத்தினுல் கலியாணபுரம் என்று மறுபெயருள்ளதாகும்.

ஸ்ரீசக்கரபாணி சரித்திரம்.

முன்னொரு காலத்தில் ஸ்ரீமஹாவிஷ்ணு காலநேமி முதலிய கொடிய அசுரர்களையெல்லாம் கொன்று வருமாறு தமது சக்கரத்தைப் பாதாளவுலகத்திற்கு அனுப்பியிருந்தார். அது அங்கே அவர்களைக் கொன்று நாசமாக்கி, அங்கேயிருந்தும் மேலே கிளம்பிவந்தது. அது வரும்பொழுது பிரும்மதேவர் காவிரியில் சக்கர தீர்த்தத்தில் ஸ்நானம் செய்துகொண்டிருந்தனர். அப்பொழுது அதுகாவிரியிலிருந்து கிளம்பி அவருடைய கையில் வந்திருந்தது அவர் அதனையேற்றுக் காவேரியின் தென்கரையில் ஓராசமரத்தின்கீழ்ப்பிரதிஷ்டைசெய்து கோயில் நிர்மாணித்து உத்ஸவம் கொண்டாடிச் சக்கர தீர்த்தத்தில் அவபிருத ஸ்நானமும் கண்டருளினர். அந்தச்சக்கரம் மிக்க தேஜோமயமாய் விளங்கிக் கொண்டிருந்தது. அப்பொழுது

சூரியன் ஆயிரங் கிரணமுள்ளவனாய், மிக்க ஒளியுடன் தனக்கு நிகராவார் ஒருவருமே இல்லையென்று கருதிச் செருக்குக்கொண்டு இவ்வுலகமெங்கும் திரிந்துகொண்டிருந்தனன். அவன் ஒருகால் கும்பகோணத்தை யடைய அங்கே பகவானுடைய சக்கரம் தேஜோமயமாக விளங்கிக்கொண்டிருப்பதைக் கண்டான். கண்டு பெருவியப்புக்கொண்டு ஆ! ஆ!! இது நம்மைப் பார்க்கிலும் ஜோதிர்மயமாக விளங்குகின்றதே இது யாதோ? இதனுடைய ஜோதியைக்குறைத்துவிடுகிறேன். அன்றியும் என்னுடைய வெப்பத்தினால் அதனை எரித்தொழித்து விடுகின்றேன் என்று சூரியன் நினைத்துக்கொண்டு, தன்னுடைய ஆயிரம் கிரணங்களையும் ஒரே முகமாகச் சக்கிரத்தின்மேல் தாக்கினான்.

அப்பொழுது ஸ்ரீ மஹாவிஷ்ணுவினுடைய சக்கிராயுதம், சூரியனுடைய செருக்கைத் தணிக்கவேண்டும் என்று கருதித் தன்னுடைய தேஜஸை வெளியில் கக்கிற்று. அதனைக்கண்டு சூரியன் இன்னும் வெப்பத்தை அதிகமாகச் செய்தான். அதற்கும், சக்கரம் தன்னுடையதேஜஸை அதிகமாகச் செய்துகொண்டு வரவே, இவ்வுலகமும் அதிலுள்ள எல்லாப் பொருள்களும் அவ்வெப்பத்தைத் தாங்கமாட்டாமல்

முறையிடத்தொடங்கின அதனையறிந்த பிரம்மாதி தேவர்கள் சூரியனைநோக்கி, பாஸ்கரனே, நீ உன்னுடைய கிரணங்களை யடக்கிக் கொள்ளவேண்டும். அது ஸ்ரீமஹாவிஷ்ணுவினுடைய சக்கரப்படை. தேஜஸினால் அதனை வெல்வதற்கு ஒருவராலும் முடியாது வீணாக உயிர்களெல்லாம தவிக்கின்றன. ஆதலால் உன் கிரணங்களை இழுத்துக்கொள்க என்று வேண்டிக் கொண்டனர். சூர்யன் அவர்கள வேண்டிக்கொண்டதைப் பொருட் படுத்தாமல் மேலும் மேலும் கிரணங்களை வீசத்தொடங்கினான். அப்பொழுது பிரம்மா முதலானவர்கள் சூரியனை விட்டுவிட்டுச் சக்கரத்தை யடைந்து சுவாமி நீர் இவ்விதம் கிரணங்களைப் பரப்பினால் உலகம் தாங்காது நாங்கள் சூரியனை வேண்டிக்கொண்டோம் அவன் செருக்கினால் எங்கள் வார்த்தையைக் கேட்கவில்லை நீர் தாழ்ந்தருளவேண்டும். அதனால் உம்மை ஒருவரும் இகழமாட்டார்கள், கொண்டாடுவார்கள் என்று பிரார்த்தித்தனர்.

அவர்கள் பிரார்த்தனைக்குச் செவிகொடுத்த சக்கராயுதம் தன்னுடைய தேஜஸை ஒடுக்கிக்கொள்வதாக அவர்களை நோக்கிக்கூறிவிட்டுத் தன்னுடையகிரணங்களை இழுத்துக்கொள்

ளத் தொடங்கிற்று. அவ்விதம் தன்னுடைய கிரணங்களை இழுத்துக்கொள்வதன் மூலமாய் சூரியனுடைய கிரணங்களையும் தன்னிடத்தில் இழுத்துக்கொண்டு விட்டது. சூரியன் ஒளியிழந்து, தோசைக்கல்லைப் போலாயினன். உலகத்தில் தாபமும் அடங்கிற்று. பிரம்மா முதலிய தேவர்களும் மற்றுமுள்ள ஜீவராசிகளும் சக்கராயுதத்தை பலவாறு துதித்தனர்.

பிறகுசூரியன் சாரங்கபாணியையடைந்து தன்னுடைய ஒளிமழுங்கினதைத் தெரிவித்தான். அவர் சூரியனே! நீ செருக்குக்கொண்டு நம்முடைய ஆயுதத்துடன் எதிர்த்தமையால், இங்ஙனமாயினை. ஆதலின், நீ சக்கரதீர்த்தத்தில் ஸ்நானஞ்செய்து நம்மைச் சக்கிராயுதத்தில் ஆவாஹனமசெய்து, ஆராதனம் பண்ணுவாய். நாம உனக்குத் திரும்பவும் ஒளியினையளித்தருளுவோம் என்று கூறியருளினார்.

அங்ஙனமே சூரியன் பிரமமாவினால்காவிரியின் தென்கரையில பிரதிஷ்டை செய்யப்பட்டுள்ள சக்கரத்தில் பகவானை ஆவாஹனம்செய்து தினந்தோறும்காவிரியில் சக்கர தீர்த்தத்தில் நீராடி, சக்கரபாணியைச் சக்கரத்தில் பூஜை செய்து வந்தனன். அதனால் மகிழ்ச்சியடை

ந்த சக்கரபாணி, அவனுக்கு முன்போலக் கிரணங்களை யருளி, அவனால் தாம் ஆராதிக்கப் பட்டமையால், இக்கும்பகோணத் தலத்திற்குப் பாஸ்கர க்ஷேத்திரம் என்று பெயர் வழங்கக் கடவது என்றும் அருளினர். சூரியன் முன் போலவே தன்னுடைய கிரணங்களையெல்லாம் பெற்றுச் செருக்கொழிந்து உலகத்திற்கு ஒளி செய்வானாயினன்.

பூவராகர் வரலாறு

முற்காலத்தில் ஸ்ரீமஹாவிஷ்ணுவை சேவிக்கவேண்டுமென்று பிரம்மாவின் மானசபுத்திரர்களாகிய சனகர் முதலிய நால்வரும் ஸ்ரீவைகுண்டத்தை யடைந்தனர். அங்கே ஜயன், விஜயன் என்ற துவாரபாலகரிருவரும் அம்முனிவர்களைப் பகவானைச் சேவிப்பதற்கு உள்ளே விடமாட்டோம் என்று தடுத்துவிட்டனர். அதனால் அம்முனிவர்கள் சினங்கொண்டு அவ்விருவரையும் ஸ்ரீமஹாவிஷ்ணுவுக்கு விரோதிகளாகப் பூமியில் பிறக்கும்படி சபித்துவிட்டனர். அப்பொழுது அந்தத் துவாரபாலகர்கள் ஸ்ரீமஹாவிஷ்ணுவையும் முனிவர்களையும் வணங்கித் தாம்செய்த பிழையினைப் பொறுத்தருளுமாறு வேண்டினர். மஹாவிஷ்ணு அவர்

களை நோக்கி, அன்பர்களே நீங்கள் பூமியில் மூன்று ஜென்மம் எடுப்பீர்கள் அந்த ஜென்மங்களில் நாமே உங்களைக்கொன்று இறுதியில் மோக்ஷத்தைக் கொடுத்தருளுவோம் என்று கூறியருளினார்.

அவ்வண்ணமே ஜய விஜயர்களாகிய அவ்விருவரும்பூமியில் இரணியாக்ஷன், இரணியகசிபு என்று பெயர் வாய்ந்த அசுரர்களாகப் பிறந்தனர். அவர்கள் வைதிக காரியங்களையும் முனிவர்களையும் தேவர்களையும் இடையூறுசெய்து கெடுப்பாராயினர். அவர்களில் இரணியாக்ஷன் இந்தப் பூமியைப் பாய்போலச் சுருட்டிக்கொண்டு கடலில் வீழ்ந்து ஒளிந்தனன். தேவர்கள் திருமாலிடம் சென்று முறையிட்டனர். அவர் அவர்களைத்தேற்றி அனுப்பிவிட்டு, வராகத்தின் (பன்றியின்) உருவமெடுத்துக்கொண்டு கடலுக்குள்சென்று, இரணியாக்ஷனுடன் சண்டைசெய்து, அவனைக்கொன்று வீழ்த்திவிட்டு தம்முடைய கொம்புகளில் பூமியைத் தூக்கிக் கடலுக்குமேல் வைத்துவிட்டுத்தாம் பூமியைத் துளைத்துக்கொண்டு வெளிக்கிளம்பினார். அங்ஙனம் அவர் துளைத்துக்கொண்டு கிளம்பின விடம் கும்பகோணத்தலமாக இருந்தது அவர் மாசிமாசப் பூர்ணிமையும் மக நக்ஷத்திரமும்

கூடிய நாளாக இருந்தமையால், தேவர்கள் அங்கேவந்து, அவருக்கு அந்த நாளில் திருவிழாக்கொண்டாடி, அவர் துளைத்துக்கொண்டு வந்தவிடத்திற்குக் கிழக்குப் பக்கத்தில். ஒரு ஆலயமமைத்து, அதில் அவரைப் பூதேவியுடன் பிரதிஷ்டைசெய்து, அவர் துளைத்துக் கொண்டுவந்த துவாரத்தை ஒரு தீர்த்தமாகச் செய்து, அதில் நீராடி. வராகப்பெருமானைப் பூமிதேவியுடன் ஆராதிப்பவர்களுக்கு சக்கிரவர்த்தியாகுந் தன்மையை அனுக்கிரஹிக்கவேண்டுமென்று வராகப்பெருமானை வேண்டிக் கொண்டனர் அவரும் அங்ஙனமே அருள் செய்தார்

வரதராஜர் வரலாறு

முற்காலத்தில் மகேந்திர பர்வதத்தில் மதங்கன் என்று பெயர்வாய்ந்த மறையவன் ஒருவன் இருந்தான். அவன் விஷ்ணுவினிடத்தில் மிகுந்த பக்தியுள்ளவன். அவன் அப்பெருமானைச் சேவிக்காமல் ஒவ்வொருநாளும் உண்பதில்லை. பகவானை ஆராதிப்பதில் அன்புள்ளவன். பரமபாகவதனான அந்த மதங்கன் ஒவ்வொருநாளும் காலையில் எழுந்திருந்தவுடன், திருவணை (ஸ்ரீராமசேது) சென்று, அங்கே

நீராடி, நடுப்பகலில் திருக்குடந்தையை யடைந்து, ஆராவமுதனையும் கோமளவல்லியையும் ஆராதித்துவிட்டு, இராத்திரியில் காஞ்சீபுரநகரத்தை யடைந்து, அங்கே கஜேந்திரவரதனுக அத்திகிரியில் எழுந்தருளியுள்ள வரதராஜனையும், பெருந்தேவித் தாயாரையும் அடிபணிந்து பின்னர்ப் போஜனம் செய்வான்.

இங்ஙனம் அம்மறையவன் நியமமாக இவ்விரதத்தை யனுஷ்டித்து வருகையில், இவனுடைய பக்தியைப் பரீக்ஷிக்க வேண்டுமென்று வரதராஜப்பெருமான் கருதினர். அதற்கேற்ப ஒருநாள் அவன் காலையில் தனுஷ்கோடிசென்று நீராடி, மத்தியானம் திருக்குடந்தையை யடைந்து, ஆராவமுதனைச் சேவித்துத் துதித்தனன். அப்பொழுது மழைக்காலமாக இல்லாதிருந்தும், காஞ்சி வரதராஜப்பெருமான் ஒரு மழையை யுகாந்தகாலத்தில் பெய்வதுபோலத் திருக்குடந்தையில் பெய்யும்வண்ணம் செய்தார். மழை மத்தியானத்தில் தொடங்கியது விடவேயில்லை. மறையவன் கச்சிநகர்க்கு எவ்விதம் போவது என்று தவித்தான். தன்னுடைய விரதத்திற்கு எங்கே பங்கம் வந்துவிடுமோ என்று பயந்தான். சூரியனும் அஸ்தமித்து விட்டான். மழை நின்றபாடில்லை. பிறகு மழை

ஒருவாறு நிற்கத்தொடங்கிற்று. அதற்குமேல் காஞ்சீபுரம் செல்வது மதங்கனுக்கு முடியாத காரியம். யாது செய்வான் பாவம்! அவன் காவிரியின் வடகரையை யடைந்து ஒரு சம்பக மரத்தின் நிழலடியில் நின்றுகொண்டு, வரத ராஜனையே மனத்தில் நினைத்து நினைத்து, அப்பனே! நான் யாது செய்வேன், எல்லாமுன தருளே. நான் இம்மழையினால் காஞ்சீபுரத் தையடைய முடியவில்லை, நான் கொண்டவிரதம் குறைவுள்ளதாக ஆயிற்று. இன்று இரவு உன்னைக்காணுமல் எவ்விதம்இருப்பேனென்று கதறி யழுவானாயினன். அவனுடைய பக்தி க்கு உகந்தருளிய எம்பெருமான் உடனே அவ னுடைய மனத்துயரைத் துடைக்கக்கருதிக் கருடன்மேலேறிக்கொண்டு, காஞ்சீபுரத்தினின் றும் ஆகாயமார்க்கமாகப் புறப்பட்டுத் திருக் குடந்தையின் வடபுறத்தில் காவிரியின் வட கரையிலுள்ள சம்பகாரணியத்தில் மதங்கனு க்கு எதிர்தோன்றிக் காட்சி கொடுத்தனர்.

மதங்கன் வரதராஜப்பெருமானைச் சேவி த்து ஆனந்தமடைந்து, தன்பொருட்டு அவ் விடத்திற்கு எழுந்தருளிவந்த அப்பெருமா னது எளிமையை வியந்து போற்றிப் புகழ்வா னாயினன். வரதராஜன் அவனிடத்தில் இரக்

கங்கொண்டு அன்பனே! உன்னுடைய பக்தியைப் பரீக்ஷிப்பதற்காக நாமே இவ்விதம் செய்தோம். உன்னுடைய பக்தி திடமான பக்தியென்று கண்டோம். உனக்குவேண்டும் வரங்களைப் பெற்றுக்கொள்க. நாம் அவ்வரங்களைக் கொடுத்து, வரதன் என்னும் பெயரை அர்த்தமுள்ளதாகச் செய்துகெள்வேன் என்று கூற மதங்கன் சுவாமி தேவரீர் எனக்குக் காட்சியளித்ததுபோலவே இவ்விடத்தில் என்று மிருந்துகொண்டு யாவருக்கும் காட்சியளித்து, அவர்கள் வேண்டியவரங்களையெல்லாம் அளித்தருள வேண்டும். இவ்விடத்தில் ஒரு தீர்த்தத்தையுண்டு பண்ணவேண்டும். முடிவில் எனக்கு மோக்ஷத்தைக் கொடுத்தருளவேண்டும் என்று பிரார்த்தித்தான். அவர் அங்ஙனமே யாகட்டும் என்று கூறியருளித் தம்முடைய கதையால் அங்கே ஒரு தீர்த்தம் உண்டாக்கினார். அதற்குக் கதாதீர்த்தம் என்று பெயர் பிறகு மதங்கன் அவரிடத்தில் வரங்கள் பெற்றுக் கொண்டு தன்னுடைய இருப்பிடமான மகேந்திர பர்வதத்தையடைந்து, இனிதாக வாழ்ந்திருந்து, இறுதியில் வரதராஜனுடைய திருவருளால் மோக்ஷத்தையும் அடைந்தான்.

திருமழிசையாழ்வார் வரலாறு

திருமழிசை என்னும்நகரில் பார்க்கவமுனிவருக்கு அவதரித்தவரான இவ்வாழ்வார், திடமான விஷ்ணுபக்தி யுள்ளவராய், திருமால் திருப்பதிகள்தோறும் சென்று, திவ்யமங்கள விக்ரஹங்களை மங்களாசாசனம் செய்துகொண்டு, ஈற்றில் திருக்குடந்தை நகரடைந்து, அமலசம்ஸ்தானம் என்னும் வைதிகவிமானத்தில் திருக்கண் வளருகின்ற ஆராவமுதனை மங்களாசாசனம் செய்தருளி, அவர் சேவையில் ஈடுபட்டு,

"நடந்தகால்கள் நொந்தவோ நடுங்கஞால மேனமாய், இடந்தமெய் குலுங்கவோ விலங்குமால் வரைச்சுரம், கடந்தகால் பரந்தகாவிரிக்கரைக் குடந்தையுள், கிடந்தவா றெழுந்திருந்து பேசுவாழிகேசனே."

என்னும் சந்த விருத்தத்தை யனுசந்திக்கையில், எம்பெருமான் அப்பாசுரத்தில் விண்ணப்பித்துக் கொள்ளப்பட்டவண்ணம் தமது முடியைச் சிறிது தூக்கி, ஆழ்வாருக்குச் சேவை சாதிக்க, அப்பொழுது ஆழ்வார், வாழிகேசனே என்று பிரார்த்திக்க, எம்பெருமான் முன் போலவே பள்ளிகொண்டருளினர்.

பின்னர் ஆழ்வார், திருக்குடந்தை நகரின் கண் ஒரு நந்தவனத்தில் எழுந்தருளியிருந்து, பல்லாயிரம் வருடங்கள் எம்பெருமானைக்கருத்தில் இருத்தி, யோகம் செய்திருந்து முடிவில ஸ்ரீவைகுண்ட லோகத்தை யடைந்தருளினார். அவர் யோகு செய்துக்கொண்டிருந்த இடம் இப்பொழுது கும்பகோணம் சாத்தாதவர் தெருவிலுள்ள திருமழிசையாழ்வார் சந்நிதியாம்.

நாலாயிரப் பிரபந்தங்கள் வெளிப் பட்ட வரலாறு

ஆழ்வார்கள் பன்னிருவரும் நூற்றெட்டுத் திருப்பதி யெம்பெருமான்கள் விஷயமாகப் பாசுரங்கள் செய்தருளினார்கள். அவற்றை உலகத்தில் பிரவசனம் செய்வாரில்லாமையால் அவை மறைந்தொழிந்தன.

பின்னர், வீரநாராயணபுரம் என்கிற காட்டு மன்னார்கோவிலில் ஈசுவர பட்டாழ்வாருக்கு நாதமுனிகள் என்பவர் அவதாரஞ்செய்து, மஹாயோகீஸ்வரராய் எம்பெருமானைத் தியானம் பண்ணிக் கொண்டிருந்து, அவர் எழுந்தருளியுள்ள சந்நிதிகளில மங்களாசாசனம் செய்துகொண்டே திருக்குடந்தைக்கு

எழுந்தருளி, அவ்விடத்தில் ஆராவமுதனை ஸேவித்துக் கொண்டிருந்தார். அப்பொழுது சில வைஷ்ணவர்கள் அங்கே வந்து, நம்மாழ்வார் அருளிச்செய்த ஆராவமுதன் விஷயமான "ஆராவமுதே" தொடக்கமான பத்துபாசுரங்களையும் சேவித்து அமுதனை மங்களாசாசனம் செய்தனர். அப்பொழுது இறுதிப் பாசுரத்தில் "குருகூர்ச் சடகோபன் குழலின்மலியச் சொன்ன ஓராயிரத்துள் இப்பத்தும்" என்றிருப்பதை நாதமுனிகள் திருச்செவி சாய்த்து. அவர்களை நோக்கி, உங்கட்கு ஆயிரம் பாசுரங்களும் வருமோ என்று வினவ, அவர்கள் எங்கட்கு இப்பத்துப் பாடலேவரும், மற்றவை தெரியா என்றனர்.

உடனே நாதமுனிகள் திருக்குருகூர் (ஆழ்வார் திருநகரி) சென்று, அங்கே ஆழ்வாரையும், மதுரகவிகளையும விக்கிரஹத்தில் மங்களாசாசனம் செய்து, மதுரகவிகளின் சிஷ்ய பரம்பரையில் வந்த பராங்குச தாசரென்பவரைக் கண்டு, திருவாய்மொழியின் கதியென்னவென்று கேட்டனர். அவர் திருவாய்மொழியும், மற்ற ஆழ்வார்கள் அருளிச்செய்த பிரபந்தங்களும் மறைந்துவிட்டன. இப்பொழுது அவை இல்லை. அவை வேண்டுமாயின் ஆழ்வா

ரருள் உண்டாயின் கிடைக்கலாம். அதற்கு நீர், ஆழ்வார் விஷயமாக மதுரகவிகள் கூறிய "கண்ணிநுண் சிறுத்தாம்பு" ஆகிய பத்து பாசுரங்களையும் ஆழ்வார் சந்நிதிமுன் இருந்து, பன்னீராயிரம் உரு ஜெபித்தால் ஆழ்வார்பிரத்தியக்ஷமாகி பிரபந்தங்களை ஓதுவித்தருளுவர் என்று கூறியருளினர்

நாதமுனிகளும் அங்ஙனமே "கண்ணிநுண் சிறுத்தாம்"பினைப் பன்னீராயிரம் உரு ஜெபித்தருள. நம்மாழ்வார் நாதமுனிகளுக்குப் பிரத்தியக்ஷமாகித் திருவாய் மொழியையும் மற்றுமுள்ள பிரபந்தங்களையும் ஓதுவித்தருளினர். அதனைப்பெற்று நாதமுனிகள் உலகத்தில் பிரவசனம் செய்தருளினர். ஆகவே நாலாயிரப் பந்தங்கள் மறைந்துபோனவற்றை வெளிப்படுத்தக் காரணமாயிருந்தது "ஆராவமுதே" என்னும் தொடக்கமான திருக்குடந்தைப் பாசுரமே என்பது தெளிவாம்.

மூன்றாவது தீர்த்த மகிமை.

மஹா மகத்தீர்த்தம்.

இனி தீர்த்த மகிஹிமையைப்பற்றிக் கூறப்புகுங்கால் இதற்குமுன் கூறப்பட்டுள்ள சிவாலய விஷ்ணுவாலயங்களின் வரலாறுகளில் பெரும்பாலும் கூறப்பட்டுவிட்டன. அவை இங்கே தொகுத்துக் கூறப்படும்.

முன்னர், வேடனாகிய பரமசிவன் அமுத கடத்தைச் சிதைத்து, அமுதத்தை ஐந்து குரோசமளவு பரவச்செய்யும்பொழுது, அவ்வமுதத்தை அமுதகடேசுவரருக்கு முன் நேர் கீழ்த்திக்கிலும் அக்னி மூலையிலுமாக இரண்டிடத்தில் வாவிபோல் தேங்கி நிற்கும்வண்ணம் செய்கருளினார் என்று இதற்குமுன் கூறப்பட்டுள்ளது. அங்ஙனம் தேங்கிய வாவிகளில், தென் கீழ்த்திசையில் உள்ள அமுதவாவிக்கு மஹா மகத்தீர்த்தம் என்று பெயர்பெறும். கிராதனாகிய ஈசுவரன், அமுதகடத்தில் மறைந்தவுடன், பிரும்மதேவர், அவருக்கு உத்ஸவம் கொண்டாடி, பத்தாவது தினத்தில் மகநட்சத்திரத்தில் அவ்வாவியில் அவபிருத ஸ்நானம் கண்டருளினார். சூரியன் கும்பராசியையும், குருவும், சந்திரனும் சிங்கராசியையும் அடை

ந்துநிற்கும் மக நக்ஷத்திரத்தில், அவ்வமுத வாவியில் அவபிருத ஸ்நானம் நடைபெற்றமையால், அவ்வாவிக்கு மஹா மகதீர்த்தம் என்று பெயருண்டாயிற்று. மேலே கூறியவண்ணம், குருசிங்கராசியையடைந்துநிற்கும்போது உண்டாகும் மகம் பன்னிரண்டாண்டிற்கு ஒருமுறையாதலின், அத்தினம் மஹாமகம் என்றபெயர் பெறும். அம்மஹா மகதினத்தில், கங்கைமுதலிய நவகன்னியர்களும் இத்தீர்த்தத்தில் வருகின்றார்களாதலின், கங்கை முதலிய அவ்வொன்பது நதிகளிலும் தனித்தனி நீராடியபலனை, இவ்வாவியில் மஹா மகதினத்தில் நீராடுவதால் அடையலாம்.

அவ்வாவியில்கிழக்கில், இந்திர தீர்த்தமும் தென் கிழக்கில், அக்னி தீர்த்தமும், தெற்கில் யமதீர்த்தமும், தென்மேற்கில் நிருதி தீர்த்தமும், மேற்கில் வருணதீர்த்தமும், வடமேற்கில் வாயு தீர்த்தமும், வடக்கில் குபேர தீர்த்தமும் வடகிழக்கில் ஈசான தீர்த்தமும், அமைந்து கிடக்கின்றன. இந்திர தீர்த்தத்தில் ஸ்நானம் செய்தால், தேவலோகத்தையடைந்து இன்பங்களை யனுபவிப்பான், அக்னிதீர்த்தம், தன்னிடத்தில் ஸ்நானம்செய்தவர்களுடைய, பாபங்களையெல்லாம் நீராக்கிவிடும். யமதீர்த்தத்

தில் நீராடுபவர்களுக்கு யமவாதனை கிடையாது. நிருதி திசையிலுள்ள தீர்த்தமானது, பூதம் பிரேதம் பைசாசம் இவைகளை ஒட்டிவிடும். வருண தீர்த்தமோ, ஒருவனுக்கு இம்மையில் ஞானத்தையும், மறுமையில் மோக்ஷத்தையும் கொடுக்கும் வாயு தீர்த்தம், ஒருவனுக்கு நேரும துன்பங்களையெல்லாம் தொலைத்து இன்பம் நல்கும். குபேர தீர்த்தத்தில் மூழ்கு பவர்களுக்கு, குபேரனிடத்தி லிருப்பதுபோன்ற செல்வமுண்டாகும் ஈசான தீர்த்தமோ, தன்னிடத்தில் மூழ்குபவர்களுடைய பாவமனைத்தையுமபோக்கி, அவர்கள் நினைத்தவற்றை யெல்லாம் கொடுக்கும் தன்மைவாய்ந்தது

இன்னும், மஹா மகதீர்த்தத்தில், வாயு தீர்த்தத்திற்கும், குபேர தீர்த்தத்திற்கும் நடுவில பிரமமதீர்த்தம என்றொரு தீர்த்தம் இருக்கின்றது. அதில நீராடினால், நீராடுபவனுடைய நூற்றொரு தலைமுலையி லுள்ளவர்க்குத் துன்பம் என்பது அணுகாது. இன்னு‌ம், அது, பல தலைமுறையி லுள்ளவர்களைக் கரையேற்றும் தன்மை வாய்ந்தது.

இனி மஹாமக தீர்த்தம், கன்னியா தீர்த்தம் என்னும பெயர்பெறும். சிங்கராசியில் குருவரும் காலத்தில், மாசிமாதம் பூர்ணமை

கூடிய மக நட்சத்திரத்தில், கங்கை, யமுனை, நருமதை, சரஸ்வதி, கோதாவரி, காவேரி, பயோஷ்ணி, சரயு, கன்யாகுமரி, என்கிற நதியுருமான ஒன்பது கன்னியர்களும், அத்தினத்தில் வந்து சேருவதால், அது கன்யாதீர்கதம் என்று பெயர்பெற்றது. அத்தீர்த்தங்கள் இருக்குமிடமாவன:

வாயு தீர்த்தத்திற்கும் பிரம்ம தீர்த்தத்திற்கும் நடுவில், கங்கை.
பிரம்மதீர்த்தத்திற்கும் குபேரதீர்த்தத்திற்கும் நடுவில், யமுனை,
குபேரதீர்த்தத்திற்கும் ஈசானதீர்த்தத்திற்கும் நடுவில், கோதாவரி,
ஈசானதீர்த்தத்திற்கும் இந்திரதீர்த்தத்திற்கும் நடுவில், நருமதை,
இந்திரனுக்கும் அகினிக்கும் நடுவில, சரஸ்வதி
அக்கினிக்கும் யமனுக்கும் நடுவில், காவேரி,
யமனுக்கும் நிருதிக்கும் நடுவில், கன்யாகுமரி,
நிருதிக்கும் வருணனுக்கும் நடுவில், பயோஷ்ணி
வருணனுக்கும் வாயுவுககும் நடுவில், சரயு,

இவற்றுள், கங்கையானது, மஹாமக தினத்தில், பதினாயிரம் கங்காஸ்நாந பலனை யளித்து மோக்ஷத்தையும் கொடுக்கும், யமனை செல்வத்

தைக் கொடுக்கும், கோதாவரி நினைத்தவற்றை யெல்லாம் கொடுக்கும், நருமதை பாவத்தை யெல்லாம் தொலைக்கும், சரஸ்வதி ஞானத்தை யும் வைராக்கியத்தையும் கொடுக்கும், காவேரி பாவங்கள் எல்லாவற்றையும் போக்கி, நினைத்த வற்றையெல்லாம் தரும். கன்யாகுமரி, பதி னாயிரம் அசுவமேத பலனையளிக்கும். பயோ ஷ்ணி என்னும் தீர்த்தம், கோலோகத்தையடை யும்படி செய்யும். சாயுலோ, கலியினால் உண் டாகும் துன்பத்தையெல்லாம் ஒழிக்கும் தன் மை வாய்ந்தது.

மஹாமகதினத்தில், கன்னியா தீர்த்தத் தில் ஸ்நானம்செய்து நவகன்னியர்களையும் தரி சிப்பவர்கள் நினைத்தவற்றையடைவார்கள்.

2. பொற்றாமரை.

ஆதிகும்பேசுவாருக்குத் தென் கிழக்கு மூலையிலுள்ள அமுதவாவி, மஹாமக தீர்த்த மானதும்பால, நேர்கிழக்கிலுள்ள, அமுதவாவி பொற்றாமரை தீர்த்தம், என்று பெயர் பெறும். அதில் ஸ்ரீ மஹா லக்ஷ்மிவந்து தங்கித்தவம் செய்யும்வண்ணம் பொன்மயமான தாமரை மலர்ந்திருந்தமையால், அப்பெயர் பெற்றது. அதில் நீராடுபவர்கள், மேலான பதவிகளையும், அதிகாரங்களையும், செல்வங்களையும், மக்களை யும் பெற்று மகிழ்வர்.

3. வராக தீர்த்தம்.

அது, திருமால் வராகாவதாரமெடுத்து, ப்பூமியைப் பிளந்துகொண்டுவந்த துவாரம். தீர்த்தமாயமைந்துள்ளது. அதில், மஹாமகத்தில் ஸ்நானம் செய்பவர், மனை, வயல், இராஜ்யம் முதலியவற்றைப்பெற்று வாழ்வார்கள்.

4. சக்கர தீர்த்தம்

இது, பிரம்மதேவர் பாதாளத்தில் அசுரர்களைக் கொன்றுவந்த திருமாலின் சக்கரம் தம் கையில் வரப்பெற்ற இடம், அது சக்கரதீர்த்தம் என்று பெயருள்ளதாக ஆயிற்று

முற்காலத்தில் பாவனன் என்ற பிராமணன் ஒருவன் இருந்தான், அவனுடைய தந்தை இறந்தபிறகு தகனக்கிரியைகளைச் செய்துவிட்டு, அவருடைய எலும்புகளைக் கங்கையில் கொண்டுபோய்ப் போட்டால், நல்லகதியுண்டாகும் என்று கூறிய வண்ணமே செய்யக்கருதி, எலும்புகளையெல்லாம் எடுத்து ஒரு குடத்தில் போட்டு நன்றாகமூடி எடுத்துக்கொண்டு, தன்னுடன் ஒரு சிஷ்யனையும் அழைத்துக்கொண்டு கங்கையை நோக்கிப் புறப்பட்டான். போகும் வழியில், கும்பகோணத்தில் தங்கி சூரியனால் பிரதிஷ்டை செய்யப்பட்ட சக்கரபாணியாலயத்திலுள்ள அரசமரத்தில் அக்குடத்தினை வைத்துவிட்டு சிஷ்யனை அத

ணைப் பார்த்துக்கொண் டிருக்கும் வண்ணம் கூறிவிட்டுத் தான் சக்கரதீர்த்தத்தில் ஸ்நாநம் செய்யக் காவிரிக்குச் சென்றான்.

அவ்வேளையில் சிஷ்யன், தனக்குப் பசியாயிருந்தமையால், அக்குடத்தில் ஏதாவது பக்ஷணம் இருக்கும் சாப்பிடலாம் என்று கருதி, அதனைத் திறந்து பார்த்தான், அக்குடத்தினுள்ளே, பலவர்ணமுள்ள தாமரைப் பூக்களாக இருக்கக்கண்டு அதனை முன்போல மூடி வைத்துவிட்டான். குருவினிடத்தில் அதனைக் கூறினால் அவர் கோபித்துக்கொள்வார் என்று பயந்து வாளா இருந்துவிட்டான் குருவும் ஸ்நாநத்தை முடித்துக்கொண்டு, வந்து குடத்தை யெடுத்துக்கொண்டு புறப்பட்டுச் சிறிது நாட்களில் காசிபோய்ச் சேர்ந்தான்.

அங்கே அவன் அக்குடத்திலுள்ள எலும்புகளைக் கங்கையில் போடுவதற்காகத் திறந்து சில மந்திரங்களை உச்சரித்தான். அப்பொழுது சிஷ்யன் குடத்திற்குள் பூவிருந்தனவே, அவற்றை இவர் என்ன செய்யப்போகிறார் என்று குடத்திற்குள் பார்த்தான் அங்கே பூ இல்லை எலும்புகள் இருந்தன. உடனே, அவன் தான் கும்பகோணத்தில், அக்குடத்தில் பக்ஷணம் இருக்கும் என்று திறந்து பார்க்கையில் பூக்களாக இருக்கக்கண்டதாகவும் பின்னர், இங்கே அங்ஙனமன்றி எலும்புகளாக இருப்பதையும், தன் குரு இடத்தில் கூறினான். குரு, அது

உண்மை என்பதை நன்றாய்த் தன் சிஷ்யனிட மிருந்து தெரிந்துகொண்டு, அவ்வெலும்புக ளைக் கங்கையில் போடாமல், கும்பகோணத் திற்கே எடுத்துக்கொண்டு புறப்பட்டான் அப் பொழுது கங்காதீரத்திலுள்ளவர்கள், அவன் குடத்தைக் கங்கையில் போடாமல் போகச் சம்மதிக்கவில்லை, அவனை விடமாட்டோம் என் றார்கள். அப்பொழுது ஆகாயத்தில் ஒரு அச ரீரிவாக்கு, அவர்களை நோக்கி, ஐயன்மீர்! அவனை விட்டுவிடுங்கள். கங்கையினும் புனித மானது காவிரியே. அதிலும், சக்கரதீர்த்தம் தூய்மை பொருந்தியது என்பதற்குப் பகவா னுடைய சக்கரமே; அங்கே நித்யவாசம் பண் ணுவதே தக்க சாட்சியாம். இவ்வெலும்பு களை அங்கேயே கொண்டுபோகட்டும் என்று கூறியது அங்ஙனமே அவர்கள் விட்டுவிட்ட னர். அம்மறையவன் குடத்தையெடுத்துக் கொண்டு சிஷ்யனுடன் புறப்பட்டுச் சிலநாளில் கும்பகோணம்போய்ச்சேர்ந்து, அங்கே சக்கர தீர்த்தத்தில் அக்குடத்தை அவிழ்த்துப் பார்த் தான். அதிலுள்ள எலும்புகள் தன் சிஷ்யன் கூறியவண்ணமே புஷ்பங்களாக இருக்கக்கண்டு அதிசயங்கொண்டு, அவ்வெலும்பினை அத்தீர்த் தத்திலேயே சேர்த்துவிட்டுச், சக்கரபாணி யைத் தரிசித்துவிட்டுத் தன் வீடுபோய்ச் சேர்ந்தான்.

அத்தகைய சக்கா தீர்த்தத்தில், பர்வகாலங்களில் பிதிரர்களைக் குறித்துத் தருப்பணம் செய்தால், அப்பிதிரர்கள், நல்ல கதியையடைவதோடு, தங்கள் பொருட்டுத் தருப்பணம் செய்தவனுக்கும் வேண்டிய வரங்களைக்கொடுத்து மகிழ்விப்பார்கள். பூதம், பிரேதம் பைசாசம், வேதாளம் முதலியவற்றால் பற்றப்பட்டவர்கள் அத்தீர்த்தத்தில் மூழ்குவாராயின், அவர்கள் அவற்றினின்றும் விடுபட்டு நன்மையடைவார்கள் இன்னும், அத்தீர்த்தத்தில ஸ்நானம் செய்பவர்களுக்கு, அழகு, ஞானம், முத்தி முதலிய எல்லாம் கைகூடும்.

5. காசியப தீர்த்தம்.

இது கும்பேசுவரர் கோவிலுக்கு நேர் வடக்கில் காவிரியில் அமைந்திருக்கின்றது. அது முற்காலத்தில் காசியபரால் உண்டாக்கப் பட்டதாதலின் அப்பெயர் பெற்றது. சிருஷ்டிகாலத்தில் காசியபர்; தக்ஷனுடைய புத்திரிகளில் பதின்மூவரைக் கலியாணம் பண்ணிக் கொண்டார். அவர்களில், அதிதி என்பவளிடத்தில் முப்பத்து மூன்றுகோடி தேவர்களை உண்டாக்கினர். திதியிடத்தில் அறுபத்து ஆறு கோடி அசுரர்களைச் சிருஷ்டித்தார். அதனைக் கண்ட அதிதி, தன் மக்களுக்கு விரோதிகளான அசுரர்கள், இரட்டிப்பாக இருப்பதனால் தன் மக்கள் நாசமடைவார்கள் என்று பயந்து,

காசியபரையடைந்து, தன்னுடன் சேர்ந்து இன்னும் முப்பத்து மூன்றுகோடி புத்திரர்களைத் தரவேண்டும் என்று பிரார்த்தித்தாள். அவர் உடன்படவில்லை. அவள், பலவந்தமாகச் சேரவந்தாள் அவர் அவ்விடத்தைவிட்டு அகன்றார். அதனால் அதிதி கோபம்கொண்டு, காசியபரை அலியாகப் போகும்படி சபித்தாள். அவர், அங்ஙனமே ஆகிவிட்டார். அதனால் அவர் துக்கமும் வெட்கமும் அடைந்து, பிரமதேவரிடத்தில நடந்தவற்றை ஒருவாறு தெரியப்படுத்தினார் அவர், நீ பூமியில், கும்பகோணத்தையடைந்து, ஈசுவரனை வணங்குவாயாயின் உன் சாபம் நீங்கும் என்று கூறினார்.

அவர் அங்ஙனமேசென்று, மஹாமகதீர்த்தத்திலும், பொற்றாமரை சக்கரதீர்த்தம் முதலியவற்றிலும் நீராடி, சாரங்கபாணி, கும்பேசுவரர், மங்களாம்பிகை முதலியவர்களைத் தரிசித்துவிட்டு, கும்பேசுவரர் சந்நிதிக்கு நேர்வடக்கில் காவிரியாற்றின் கரையில், நின்று மங்களநாயகியைக் குறித்துத் தவம் செய்துகொண்டிருந்தார். அவர் தவத்திற்கு மகிழ்ந்த மங்களநாயகி கும்பேசுவரருடன் அவருக்குக் காட்சிகொடுத்து, காசியபரே! நீர் அதிதி விஷயத்தில் செய்தது பிழைதான். அதன் பொருட்டு அவள் சாபம் கொடுத்தாள். நீர் முன்போலவே அவளுடன் சேர்ந்து அவளுடைய எண்ணத்தை நிறைவேற்றும் உபமுடைய அலித்தன்

மை நீங்கிவிடும். நீர் தவம் செய்துகொண்டிருந்த இவ்விடம் உம்முடைய பெயரால் காசியபதீர்த்தம் என்று பெயருள்ளதாக ஆகட்டும். இத்தீர்த்தத்தில் யாவரொருவர் நியமமாக ஸ்நானம் செய்கிறார்களோ, அவர், சந்ததியற்றவர்களாக இருந்தால், சந்ததி முதலியவை உண்டாகும் என்று வரமருளி மறைந்துவிட்டாள். அதுமுதற்கொண்டு அவ்விடம், காசியப தீர்த்தம் என்று பெயருள்ளதாக விளங்கிக்கொண்டிருக்கிறது.

6. ஈசான தீர்த்தம்.

இது, கும்பகோண நகரத்தின் ஈசான திக்கில் காவேரியில் அமைந்திருப்பதால் ஈசான தீர்த்தம் என்று பெயர்பெற்றது. இது, நாகேசுவரர், சந்நிதிக்கு நேர்வடக்கில், காவிரியின் துறையில் அமைந்துள்ளது. அதில் ஸ்நானம் செய்பவர்கள், புத்தியையும் முத்தியையும் பெற்று இன்பமடைவார்கள்.

7. மங்களகூப தீர்த்தம்.

இது கும்பேசுவரர் சந்நிதியில் மங்களநாயகி சந்நிதிக்கெதிரில் அமைந்துள்ளது. அதற்கு கந்தகூபம் என்ற மற்றொரு பெயருண்டு.

முற்காலத்தில் கந்தவேள், கும்பேசுவரரையும் மங்களநாயகியையும் பூஜை செய்ய வேண்டும் என்றுகருதி, மங்களநாயகியாராகிய

தமது தாயாரை, அங்கே ஒரு தீர்த்தம் உண்டாக்கித் தரவேண்டும் என்று பிரார்த்திக்க அவ்வம்மையார், தமது விரல் நகத்தால், கீற அங்கே ஒரு தீர்த்தமுண்டாயது. அதில் முருகக்கடவுளும, நீராடி, கும்பேசுவரரையும் மங்களநாயகியையும் பூஜையாற்றிச் சூரபன்மன் முதலிய அசுரர்களை வென்றருளினர். அத்தீர்த்தத்தில் மூழ்கினல் அது குஷ்டரோகம முதலியவற்றைத் துலைத்து நன்மையுண்டாக்கும்.

8. கதா தீர்த்தம்.

23138 21193

இது காவிரியின் வடகரையில், மதங்கன் பொருட்டு, வரதராஜர், தமது கதாயுதத்தால் உண்டாக்கிய தீர்த்தம். காவிரியின் தென் கரையில் சக்கரதீர்த்தமும் வடகரையில் கதா தீர்த்தமும் நேருககு நேராக அமைந்துள்ளன கதாதீர்த்தம் மோக்ஷத்தைக்கொடுக்கவல்லது,

9. இந்திர தீர்த்தம்.

இது இந்திரனல் உண்டாக்கப்பட்ட தீர்த்தம், இது நாகேசுவரர் கோயிலுக்குக்கொஞ்சதூரமுடைத்திலுள்ளது. அதனைக்காங்கயன குளீம், என்று இப்பொழுது வழங்குவார்கள். இது முனிசிபாலிடியாரால் மூடப்பட்டுப்போயிற்று.

முற்றிற்று.

17/10 600 0